www.padippakam.com

# கூரியர்

ஏப்ரல் 1988—தனிப்பிரதி ரூ. 2.00



## மனிதனும் விலங்குகளும்

படிப்பகம்

www.padippakam.com



## வெற்றிப் பண்கள்

கீழே: 1987 இல் யாவூந்தேயில் (காமரூன்) நடைபெற்ற ''வெளிப்பாடு'' எனும் ஏழாம் அனைத்து ஆஃப்ரிக்க இசைப் போட்டியில் பரிசு பெற்றோர் சிலர் ஃபிரெஞ்சு அனைத்துலக வானொலியும், ஆஃப்ரிக்காவிலும் இந்தியப் பெருங்கடல் பகுதியிலுமுள்ள 60 வானொலி நிலையங்களும் ஆண்டு தோறும் நடத்தும் இந்நிகழ்ச்சியில் பல நாட்டினர் போட்டியிடுகின்றனர். ஐ. நா. உலகப் பண்பாட்டு வளர்ச்சிப் பத்தாண்டுத் (1987-1997) திட்டம் வளர்க்க விழையும் பல்வேறு படைப்பாற்றல் திறங்களில் பாடல் கலை ஒன்றாகும்.

2. காமரூன்



ஒளிப்படம்: கீ லெ கொக் © மாதும், பாரிஸ்

படிப்பகம்

www.padippakam.com

# யுனெஸ்கோ கூரியர் – மாத இதழ்

- தமிழ் உட்பட 34 உலக மொழிகளில் வெளிவந்து அறிவுப் புரட்சி செய்து வரும் ஒரே சர்வதேச மாத இதழ்!

- சர்வதேசக் கண்ணோட்டத்துடன் அறிவியல், பொருளாதாரம், கல்வி கலை, பண்பாடு, தொழில் நுட்பம் போன்ற துறைகளைப் பற்றி உலக அறிஞர்கள், எழுதும் கருத்துக் களஞ்சியமான கட்டுரைகள்!

- எல்லா வயதினருக்கும் ஏற்ற, ஆவலைத் தூண்டும் அரிய செய்திகள், படங்கள், விளக்கங்கள், வண்ணப் படைப்புகள்!

- தமிழின் தனிப் பெரும் ஆற்றலைத் தரணிக்குணர்த்தி, 'தமிழ் ஓர் அறிவியல் மொழி' என்பதை செயல்பூர்வமாக நிலைநாட்டிவரும் தனிப் பெரும் தமிழ் ஏடு!

- சர்வதேசக் கண்ணோட்டத்தில் உலகைக் காட்டும் பலகணியாக தமிழில் வெளிவந்து கொண்டிருக்கும் இவ்விதழ் இல்லந்தோறும் இடம்பெற வேண்டிய சிந்தனைக் கருவூலம் ஆகும்.

## யுனெஸ்கோ கூரியர்

இதழின் விலை ரூ. 2/-

தனிப்பட்டவர்களுக்கு ஆண்டுச் சந்தா ரூ. 21/

கல்வி நிலையங்களுக்கும் நூலகங்களுக்கும் ரூ. 19

தமிழகமெங்கும் ஏஜெண்டுகள் தேவை

விபரங்களுக்கு எழுதுக :

யுனெஸ்கோ கூரியர்
தென் மொழிகள் புத்தக நிறுவனம்
18, கிழக்கு ஸ்பர்டாங்க் சாலை,
சேத்துப்பட்டு, சென்னை-600 031

I-IV பக்கங்கள் தமிழ்ப் பதிப்பில் மட்டும் வருவன



படிப்பகம்

www.padippakam.com

## உங்கள் உறவினர்களையும் அன்பு நண்பர்களையும் மகிழ்ச்சியிலாழ்த்த வேண்டுமா? இதோ ஓர் வழி!

அன்புள்ள சந்தாதாரர்களே!

சர்வதேசக் கண்ணோட்டத்துடன் அறிவியல், பொருளாதாரம், கல்வி; கலை, பண்பாடு தொழில்நுட்பம் போன்ற துறைகளைப்பற்றி உலக அறிஞர்கள் எழுதும் கருத்துக் களஞ்சியமான கட்டுரைகளையும் கண்கவர் படங்களையும் விளக்கங்களையும் கொண்ட யுனெஸ்கோ கூரியர் இதழ்களை மாதந்தோறும் படித்து மகிழ்ந்து பயனடைந்து வருகிறீர்களல்லவா?

இம்மகிழ்ச்சியையும் பயனையும் உங்கள் உறவினர்களும் நண்பர்களும் பெறவேண்டாமா? இதோ அதற்கு மிக எளிதான ஒரு வழி.

உங்கள் நெருங்கிய உறவினர்களின் நண்பர்களின் முகவரியோடு ஆண்டுச் சந்தா ரூ 21-வீதம் அனுப்பினால் போதும் உங்கள் அன்புப் பரிசாக ஓராண்டுக்கு கூரியர் இதழ்கள் அவர்கள் முகவரிக்குப் போய்ச் சேரும்.

நண்பர்களுக்கு மட்டுமா? நூலகங்கள், பள்ளிகள், சங்கங்கள் போன்ற பொது அமைப்புளுக்கும் நீங்கள் நன்கொடைச் சந்தா செலுத்தலாம். அதுவும் சலுகைச் சந்தா ரூ 19-ஐ மட்டும், முகவரியோடு அனுப்பினால் போதும். மாதாமாதம் ஓராண்டுக்கு இதழ்கள் போய்ச் சேரும்.

இதற்கு நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் கீழேயுள்ள பகுதியை பூர்த்தி செய்து சந்தாவுடன் 'யுனெஸ்கோ கூரியர்' தென்மொழிகள் புத்தக நிறுவனம், 18 கிழக்கு ஸ்பர்டாங்க் சாலை· சேத்துப்பட்டு, சென்னை-600031 என்ற முகவரிக்கு அனுப்பினால் போதும். மற்றவைகளை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்.

### அன்பளிப்புச் சந்தாப் படிவம்

அன்பளிப்புச் சந்தா அனுப்புபவர் முகவரி ........................................................

........................................................

........................................................

........................................................

அன்பளிப்புச் சந்தாவுக்கு உரியவர் முகவரி 1. ........................................................

........................................................

........................................................

........................................................

2. ........................................................

........................................................

........................................................

........................................................

........................................................

........................................................

........................................................

........................................................



படிப்பகம்

www.padippakam.com

## ஆசிரியர் மடல்

கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் எல்லா மனித சமுதாயங்களும் விலங்கினங்களுடன் இணைந்து வாழ்ந்துவந்துள்ளன. இந்த இணக்கமான வாழ்க்கையினால் பல்வேறு காலங்களிலும், பல்வேறு பண்பாடுகளிலும் ஏற்பட்ட உறவுகளின் பல இயல்புகளுள் சிலவற்றை 'யுனெஸ்கோ கூரிய'ரின் இவ்விதழ் ஆய்கின்றது இதிலுள்ள கட்டுரைகள் விடைதருவதற்குப் பதிலாக, கேள்விகளை எழுப்பக்கூடும். ஏனெனில், மனிதன் விலங்குகளைப் பல்வேறு கோணங்களிலும், வியப்புடனும், புதிர்போலவும், தெளிவின்றியும் நோக்கிவந்தான். "விலங்கு என்பது என்ன?" எனும் கேள்விக்கே பண்பாடுகளுக்கேற்ப பல்வேறு விடைகள் தரப்பெற்றன, விலங்கியல்பு என்பதற்குத் தரப்பெற்ற சாதாரண "அறிவியல்" விளக்கங்கள், அவ்விளக்கங்கள் தந்தவர்கள் தம்மைப்பற்றிக் கொண்டிருந்த கருத்துகளைக் காட்டுகின்றன. ஒரு பண்பாடு விரும்பிய விலங்கை மற்றொரு பண்பாடு வெறுத்தது. தொழில்மயமான இன்றைய சமூகத்தில் இத்தகைய இருமனப்போக்கைக்காணலாம். அதுசெல்லமான விலங்குகளின்மீது அன்பைப் பொழிகின்றது ஆனால் வேளாண்மையில் விலங்குகளுக்கு இழைக்கப்படும் கொடுமையைப் பொறுத்துக் கொள்கின்றது. இன்றைய மனிதன் பிற உயிர்களிடம் அன்பாகயிருப்பதுபோல் இருப்பினும், அவனுடைய செயல்களால் சூழல் எவ்வளவு நலிவுறுகிறதென்றால், பல இனங்களின் உறைவிடங்கள் அழிவதால் அவை பிழைப்பதே அரிதாகின்றது.

மனிதன்—விலங்கு உறவுபற்றிய மிகப் பண்டைய சான்றை வரலாற்றுக்கு முற்பட்ட பாறை ஓவியத்தில் காணலாம், சில பண்டைய சமூகங்களின் படைப்புக் கதைகள் "கடவுளரும், விலங்குகளும், மனிதரும் ஒன்றாக வாழ்ந்து, ஒரு பொது மொழியில் சமமாகத் தொடர்பு கொண்ட" ஒரு பொற்காலம்பற்றிக் கூறுகின்றன. இவை ஒருவேளை வேடருக்கும் விலங்குகளுக்குமிடையே ஓரளவு சமத்துவ உறவு நிலவியதைக் காட்டக்கூடும். அச்சமூகங்கள் உயிர்வாழ்வதற்குத் தேவையானவற்றையே கொன்றன. அவர்கள் தாம் அழித்த வளங்களைச் சூழல் திரும்பவும் பெறக்கூடிய அளவை மீறவில்லை. அதன் பிறகு ஒரு புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டது. மக்கள் வேட்டையை விட்டுவிட்டு, மேய்ச்சலிலும் வேளாண்மையிலும் ஈடுபட்டபோது, சில விலங்குகளைப் பழக்கித் தம் கட்டுப்பாட்டில் வளர்த்தனர். இதுவே இன்று தொடரும் போக்கின் தொடக்கம்.

மனிதன்—விலங்கு உறவைப் பல கோணங்களில் காணலாம். மாசில்லாமை முதல் தீய ஆற்றல்கள்வரை பல்வேறு குணங்களைக் காட்டுவதற்காக நாம் விலங்குகளைப் பயன்படுத்தியிருக்கிறோம்; சமய நடைமுறைகளில் விலங்குகளை ஈடுபடுத்தியிருக்கிறோம். காட்சிக் கலைகள், இலக்கியம், கிராமியக் கதைகள், மனித இயல்புள்ள விலங்குகளில் கேலிச் சித்திரங்கள் ஆகியவற்றில் விலங்குகள்பற்றிய நம் உணர்ச்சிகளை வெளிப்படுத்தியிருக்கிறோம். மனிதன் விலங்குகளை அறிவியல் நோக்கில் ஆய்ந்திருக்கிறான்; தனது சமூகத்தை அறிவதற்காக அவற்றின் சமூகத்தை விளக்கியிருக்கிறான்; விலங்குகளுடன் தொடர்பு கொள்ளும் எல்லையை ஆராய்ந்திருக்கிறான். இப்பல்வேறு செயல்களில் ஈடுபடும்போது அச்சம், வியப்பு, கொடுமை, அன்பு, அண்மை, சேய்மை போன்ற பலவகை உணர்ச்சிகள் அவனிடம் எழுந்துள்ளன. இவை நட்பு, பகைமை, குலையக்கூடிய அமைதி போன்ற சிக்கலான உறவுகளை எதிரொளிக்கின்றன.

**அட்டை:** ஒரு லாப்லாந்தியர் தம் கலைமான்களுடன் பட்டியில் வேலை செய்கிறார்.

**பின் அட்டை:** (உள் கட்டம்) சுவீடனில் டானமிலுள்ள வெண்கலக் காலப் பாறைச் செதுக்கோவியம். (கி.மு. 1500)

**ஒளிப்படம்:** காண்டலியர்—புருமேர் ஆர்ட்போ, பாரிஸ்

**தலைமை இதழாசிரியர்:** எதுவார்து கிளிசான்.

## ஏப்ரல் 1988
## APRIL 1988


4
**மனிதனும் விலங்குகளும்**
-மார்க் - ஒலிவியர் கோன்செத்

9
**கரடித் தாத்தா**
பண்டைய யூரேஷியப் பண்பாடுகளில் வேட்டைச சடங்குகளும் விலங்கு வழிபாடும்
-விக்டர் ஏ. ஷ்னிரெல்மன்

11
**மக்களும் செல்லமான விலங்குகளும்**
-எரிக்கா ஃப்ரீட்மன்

14
**ஹான்ஸ் எனும் குதிரை**
'பேசும் விலங்கை'த் தேடுதல்
-ஜேம்ஸ் செர்ப்பெல்

18
**வனவிலங்குகள் ஏன் தேவை?**
-ரிச்சர்டு ஃபிட்டர்

22
**ஓநாய்—மனிதன் புனைந்த பலிகடா**
-தானியல் துப்வா

24
**பெரிய 'பண்டா' கரடியின் இறுதிப் புகலிடம்**
-பான் வென்ஷி

26
**குரங்கும் சிறுத்தையும்**
ஒரு ஆஃப்ரிக்கப் பழங்கதை

28
**இஸ்லாத்தில் விலங்குகள்**
-அப்துல் ஹமீது எஸ். ஹம்தான்

31
**குருதியுறிஞ்சும் வௌவாலின் தனிவாழ்க்கை**
...மற்றும் விலங்குப் பண்புகளுக்கு அரிய எடுத்துக்காட்டுகள்
- மேரியன் ஸ்டாம்ப் டாக்கின்ஸ்

2
**நாடுகளும் பண்பாடுகளும்**
காமரூன்: வெற்றிப் பண்கள்



ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ மாதந்தோறும் 34 மொழிகளில் வெளியிடும் இதழ்.

7. பிளேஸ் தெ பொந்தனே, 75700 பாரிஸ்

தமிழ், ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ஸ்பானிஷ், ரஷ்யன், ஜெர்மன், அராபிக், இத்தாலியன், ஹிந்தி, ஹீப்ரு, பெர்சியன், டச்சு, போர்ச்சுகீஸ், துர்க்கீஸ், உருது, கட்டலான், மலேசியன், கொரியன், சுவாஹிலி, கிரோட்ட-செர்ப், ஸ்லாவென், ஜப்பானிஸ், மாசிடோனியன், செர்போ-கிராட், சீனம், பல்கேரியன், கிரீக், சிங்களம், ஃபின்னிஷ், ஸ்வீடிஷ், பாஸ்க், தாய், வியத்நாமிஸ், பாஸ்டோ

தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியர்
மணவை முஸ்தபா

ISSN 303 40
NO. 4




படிப்பகம்

www.padippakam.com

# மனிதனும் விலங்குகளும்



ஒளிப்படம்: ஆர்கிவோ ஓரால் © ஆர்ட்ஃபோ, பாரிஸ்

ஒவ்வொரு பண்பாடும் விலங்குகளைப் பற்றி வெவ்வேறு விதமாகச் சிந்திக்கிறது. மனிதனுடைய இயற்பியல் சூழலில் அவனுடன் சகவாழ்வு நடத்தும் மற்ற உயிரினங்களுடன் அவனது உறவு நிலைகளை வரையறுக்கின்ற வகையில் இந்த விலங்குகள் வகைப் படுத்தப்படுகின்றன. இதற்கென முறைகள், காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன. ஆனால், இந்த வகைப்பாடுகள் பெருப்பாலும். மனித இனங்களையும், கடவுளர்களையும், தாவரங்களையும், விலங்குகளையும், பாறைகளையும், ஆவிகளையும் வேறுபடுத்திக் காட்டுவதிலேயே முடிந்திருக்கின்றன.

பொதுவாகக் கூறின, இயற்கை அறிவியல்கள் அடிப்படையில் உள்நாட்டுப் பாமர மக்களின் அறிவு வடிவங்களிலிருந்து வேறுபட்டவை அல்ல. தொடர்ச்சியான ''சிந்தனைச் செப்பனிடுதல்'' வாயிலாக அவை வளர்ச்சி பெறுகின்றன. இவ்வாறாக விலங்குகளிலிருந்து தாவரங்களை வேறுபடுத்திக் காட்டி வகைப்படுத்துவது கடினமாக இருந்த உயிரிகளுக்கு வகை செய்வதற்காக, 19 ஆம் நூற்றாண்டில் ஓர் 'இடையீட்டு இனம்'' உருவாக்கப்பட்டது. இதிலிருந்து பின்னர் பாக்டீரியாக்கள் பகுத்தெடுகப்பட்டு, அவற்றுக்கு ''புரோக்காரியோடடுகள்' என்னும் தனிக் குடும்பப் பெயரும் சூட்டப்பட்டது.

மனிதனுக்கும் விலங்குகளுக்குமிடையே தொகுப்பு முறை வேற்றுமையினைக் காட்டுவது கடினமாக இருக்கிறது. இந்தச் சிக்கலை ஜேக்ஸ் காய்மார்டு என்ற வல்லுநர் இவ்வாறு சுருக்கமாக உரைக்கிறார்: ''விலங்குகளைத் தாவரங்களிலிருந்தும், மனித இனத்திலிருந்தும் வேறுபடுத்திக் காட்டக்கூடிய திட்டவட்டமான ஒரு பண்பியல்பினை வரையறுத்துக்கூறும் முயற்சியை மிக அண்மைக் காலத்து அறிவியல் சிந்தனை கூட இன்னும் கைவிடவில்லை விலங்குகளை ''மனிதர் அல்லாதவை' என்று வரையறுத்து விடலாம். ஆனால், இதற்கென முயற்சிகளில் எதுவும் மன நிறைவளிக்கவில்லை,

வலன்சியாவில் (ஸ்பெயின்) பைகார்ப்பின் அருகிலுள்ள அரனா குகையில் காணப்படும் இந்த ஓவியத்தில் (கி.மு. 10,000/8000 – 300) தேன் சேகரிக்கும் ஒரு நங்கையைக் காணலாம். வரலாற்றுக் காலத்திற்கு முந்திய பாறை ஓவியம் மனிதனுக்கும் விலங்குகளுக்குமுள்ள தொடர்பைக் காட்டும் மிகப்பண்டைய சான்றாகும்.

படிப்பகம்

www.padippakam.com

**மாற்கு - ஒலிவியர் கோன்செத்**



பண்டைய எகிப்திய பல தெய்வங்கள் விலங்குகளின் வடிவிலிருந்தன. வல்லூறான ஹோரஸ் எனும் வானக் கடவுள் மிகப் பண்டைய தெய்வம். கலாப்ஷாவிலுள்ள நியூபிய ஆலயச் சுவர்களில் தட்டையாகச் செதுக்கப்பட்டுள்ள இதற்கு மனித உடல் இருக்கின்றது. பண்டைய எகிப்தில் செம்மறி ஆடு, எருது, வாலில்லாக் குரங்கு, பூனை போன்றவை புனித விலங்குகளாகக் கருதப்பட்டன.


ஒளிப்படம் © எஃப்.எ.ஓ. ரோம்

விலங்குகளைப் போலன்றி, மனிதன் காலால் நேராக நிற்கக் கூடியவன் என்ற ஒரே வேறுபாட்டினைத் தவிர கருதப்பட்ட மற்ற வேறுபாடுகளில் எதுவுமே ஏற்புடையனவாக இல்லை'' காரணம் இந்த வேறுபாடு உயிரியல் சார்ந்ததாக இல்லாமல், பண்பாடும், நுண்பொருளும் சாாந்ததாக இருப்பதேயாகும்.

''வகைப்படுத்துவதில் தாங்கள் கைதேர்ந்தவர்கள் எனத் தங்களைக் கூறிகொள்ளும் 'நவஜோ' என்ற சிவப்பிந்தியர்கள் உயிரினங்களை பேசும் ஆற்றல் உள்ளவை, பேசும் ஆற்றல் இல்லாதவை என இருவகையாகப் பகுத்து, பேசும் ஆற்றல் இல்லாத வகையில் விலங்குகளையும் தாவரங்களையும் சேர்த்திருக்கிறார்கள்'' என்று கிளாடி லேவி-ஸ்டிராஸ் என்ற ஃபிரெஞ்சு மானிடவியலறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

## மாயவித்தை


'ஷாமனிசம்' எனப்படும் மந்திர சூனிய மாயவித்தை அனுபவத்தில், சில சமயம் விலங்குகள் செய்தி கொண்டு செல்லவும் சமரசத் தூது செல்லவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கானடாவில் 'பிக் டிரவுட்' ஏரிப்பகுதியில் வாழும் சிவப்பிந்தியர்களிடையே நிலவும் ஒரு பழக்கத்தை மனிதஇன ஆய்வியலறிஞர் இமனுவல் டேஸ்வோ விவரிக்கிறார். அவர்கள், ஒரு சிறுவன் பருவ வயதடையும் போது, அவனைத் தொலைவிலுள்ள காட்டிற்கு அழைத்துச் செல்கிறார்கள். அங்கு அவன் ஓர் உயரமான மரத்தில், கழுகின் கூண்டுபோல அமைத்த பரண்மேல் தன்னந்தனியாகப் பல நாட்கள் இருக்கவேண்டும். அப்போது, அவன் தெய்விக




நியூ மெக்ஸிக்கோவில் (அமெரிக்கா) ஆல்புக்கர்க்கிலுள்ள ஹோப்பி இந்தியர் பண்பாட்டு நிலையத்தின் ஒரு சுவரோவியக் காட்சி. இந்திய ஓவியர் ஜே டி. மெடினா 1978இல் இதைத் தீட்டினார்.

ஒளிப்படம் © ரோஷர் வியோல், பாரிஸ்

www.padippakam.com



ஒளிப்படம்: ஜெல்டு ° ஆர்ஃபோ, பாரிஸ்

அழகிய விலங்கு வேலைப்பாடுகளமைந்த இம்மரப் படகின் முன்பகுதியைக் காமருனிலுள்ள டுவாலா இனக் கலைஞர் செதுக்கினார்.

குஞ்சுகளுக்கு உணவூட்டும் இச்சிறு வெண்கலப் பெலிக்கான் ஒரு காலத்தில் தங்கப் பொடியையும் கட்டிகளையும் நிறுக்கும் அழகான எடையாகப் பயன்பட்டது. இதை ஐவரி கோஸ்டின் பாவூல் இன உலோகக் கலைஞர் ஒருவர் செய்தார். பல மேற்கு ஆஃப்ரிக்க கைவினைஞர் விலங்கு உருவங்களையும் காட்சிகளையும் காட்டும் இத்தகைய எடைகளைச் செய்தனர். அவை ஒவ்வொன்றும் சில செடிகளின் விதைகளின் எடைகளை யொத்த பண்டைய எடை அலகுகளைக் குறித்தன. அவை ஒரு பழமொழியை அல்லது செய்தியைத் தெரிவித்தன.

சக்திகளுடன் தொடர்பு கொள்வதற்கு அவனை இயல்விக்கக்கூடிய மாயக்காட்சிகள் தோன்றும் என அவர்கள் நம்புகிறார்கள். இதன் பிறகு அந்தச் சிறுவன் பல்வேறு விலங்கினங்கள் குறித்து ஒரு தனி வகைச் சடங்குமுறையினை அனுசரிக்கிறான். இதில், உணவு விலக்குகள், மொழி விலக்குகள், இறைச்சியை அல்லது எலும்பினை உணவுக்குப் பக்குவப்படுத்துவது குறித்த சடங்குகள் ஆகியவையும் அடங்கும்.

இந்தச் சமயங்களில் சிவப்பிந்தியர்கள் உறவுகளை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். இந்த உறவுகளை அவர்கள் தங்கள் ஆயுள் முழுவதும் பேணி வருகின்றார்கள். தெய்வித சக்திகளிடமிருந்து ஆற்றலைப் பெறக் கூடிய வேறு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் அவர்கள் விரும்புகிறார்கள். தாங்கள் வளர வளர இந்த ஆற்றலும் வளரும் என அவர்கள் நம்புகிறார்கள். ஆடவர் வேட்டையாட இயலாத அளவுக்கு முதுமையடையும்போது, ''தொலை நோக்குப் பார்வை'' என்றும் மற்றொரு சடங்கினைச் செய்து சமூகத்தில் தங்களின் குறிப்பிட்ட சக்திகளை அவர்கள் செலுத்த முயல்கிறார்கள். இந்தச் சடங்கின்போது ''ஒபவாகனக்'' எனப்படும் விலங்கு ஆவிகளைச் சிவப்பிந்தியர்கள் வரவழைத்து, ஓர் அறைக்கோளக் கூண்டினுள் அடைத்து, அதனைச் சில காரியங்களைச் செய்யும்படி ஏவுகிறார்கள். இது எல்லாத் தனிநபர்களுக்கும் பொதுவான ஓர் ''உளவியல் நடைமுறை'' யாகத் தோன்றுகிறது. தீக்கை தொடங்கும் இளமைக் காலம் முதற்கொண்டு முதுமைவரையிலும் அவர்கள இதனைக் கையாள்கின்றார்கள். 'இந்த வகையில் மந்திர சூனிய மாயவித்தை சிவப்பிந்தியரின் வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும்-ஒவ்வொரு நடவடிக்கையிலும் ஊடுருவி நிற்கிறது. விலங்குகளின் ஆவிகள் காலத்தையும் இடத்தையும் கடந்து காரியங்களைச் சாதிக்கவல்ல ஊடகங்களாகத் துணை புரிவதாக அவர்கள் நம்புகிறார்கள்''

## தடைக் கட்டுகள்

மனிதக் குழுமங்களின் பண்பாட்டிற்கும் தற்பண்பிற்கும் அடிப்படையான வகைப்படுத்துதலின் முக்கியத்துவத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்குவது பன்றி இறைச்சி யூதர், முஸ்லிம் சமுதாயங்களில் பன்றி இறைச்சி தடைசெய்யப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட விலங்கின் இறைச்சியை ஒரு குழுமம் உண்கிறதா இல்லையா என்பது அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஒரு குறிப்பிட்ட வகை இறைச்சியை ஒரு குறிப்பிட்ட முறையில், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் உண்கிற அல்லது உண்ணாதிருக்கின்ற எவரொருவரும் ஓர் அயலவராகவே கருதப்படுகிறார்.

பிரிட்டிஷ் மானிடவியலறிஞராகிய மேரி டக்ளஸ் என்ற அம்மையார், ''தூய்மையும் அபாயமும்'' என்ற புகழ்பெற்ற நூலில், ''விலங்குகளில் தூய்மை என்னும் அடிப்படைத் தத்துவம் அவை அவற்றின் இனத்திற்கு முற்றிலும் இணங்கியவாறு இருத்தல்வேண்டும் என்பதேயாகும். தூய்மையின்றி இருக்கும் விலங்குகள் அவற்றின் இனத்தில் முழு அங்கம் அன்று என்று கூறியுள்ளார். இந்த வகையில்தான ஹீப்ரு மரபுகளின்படி பன்றி விலக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு விலக்களிக்கப்பட்ட விலங்குகளில் ஒட்டகம், பாறைக் கரடி, முயல் ஆகிய பிராணிகளும் அடங்கும். சமூகப் பழக்கங்களில் வகைப்படுத்துதலின் முக்கியத்துவத்திற்கு இது திட்டவட்டமான எடுத்துக்காட்டு.



ஒளிப்படம்: புருனோ பார்பி © மாக்னம், பாரிஸ்

ஃபிரான்சுவா சாவியர் லாலான் எனும் இன்றைய ஃபிரெஞ்சுக் கலைஞரும் அவருடைய ''ஆட்டு மந்தை'யும். இதில் உயிரளவுள்ள 24 ''ஆடுகள்'' உள்ளன. (16 ஆடுகளுக்குத் தலை இல்லை). இவை செம்புத் தகடு, வார்ப்பு அலுமினியம், மரம், எஃகு, ஆட்டுத் தோல் ஆகியவற்றல் செய்யப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம்: ஹெல்டு ● ஆர்ட்ஃபோ, பாரிசு

பன்றி இறைச்சியை மிகுதியாக உண்ணும் பழக்கமுடைய சமுதாயங்களில்கூடச் சில சமயங்களில் பன்றி இறைச்சி உண்பதற்குத் தடைவிதிக்கப்படுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் உணவுத் திட்டம் என்ற போதிலும், பன்றி எல்லா வகை உணவுகளையும், மலத்தையும் தின்கிற ஒரு மட்டமான பிராணி என்பதும் இதற்கு முக்கியக் காரணம்.

## புலாலுண்போரும் பிராணிகளை விரும்புவோரும்

சில சமயம் கவலையை அளிப்பது பன்றி இறைச்சியைப் பக்குவப்படுத்தும் தொழில் மட்டுமன்று. பன்றி அல்லாத மற்றப் பிராணிகளின் இறைச்சியும் நுகர்வுச்காக சுகாதார மற்ற சூழ்நிலைகளிலேயே பக்குவம் செய்யப்படுகிறது செல்லப் பிராணிகளைப் பேணி வளர்ப்பதற்கு அபரிமிதமான கவனம் செலுத்தும் அதே சமயத்தில் உணவுக்காக வளர்க்கும் பிராணிகளைப் பேணுவதில் போதிய கவனம் செலுத்தாமலிருப்பது வியப்பாக இருக்கிறது.

மற்றொரு சிக்கல் விலங்குப் புரதம் நுகர்வு பற்றியதாகும். விலங்கு புரதம் தயாரிப்பதற்கு மிக அதிகமாகச் செலவாகிறது. ஒரு கிலோ விலங்குப் புரதம் தயாரிப்பதற்கு 5—20 கிலோ தாவரப் புரதம் தேவைப்படுகிறது. விலங்குப் புரத நுகர்வு உலகின் பல்வேறு பகுதிகளிலும் வெகுவாக வேறுபடுகிறது. உலகில் பெரும்பாலான மக்கள் புலால் உண்பதில்லை; அல்லது விழா நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் மட்டுமே புலால் உண்கிறார்கள். உலக மக்களில் மிகக் குறைந்த விகிதத்தினரே தினமும் புலால் உண்கின்றனர். புலாலுண்ணி விலங்குகளை தோழமை விலங்குகளாக வளர்க்கத் தொடங்கியதும் இறைச்சி நுகர்வு அதிகமாகியது.

'நாகரிக'' மனிதன் மென்மயிருக்காக விலங்குகளை வளர்க்கலானான். இறைச்சிக்காக வனவிலங்குகளையும், கடல் வாழ் பாலூட்டிகளையும் வேட்டையாடலானான். சில விலங்



படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம்: பி. வார்டு © எ.என்.எ., பாரிஸ்

'மிக்கி மவுஸ்' எனும் மனித வடிவிலுள்ள எலி அமெரிக்க திரைப்படத் தயாரிப்பாளர் வால்ட் டிஸ்னி (1901-1966) படைத்த புகழ்மிகு உயிர்த்துடிப்புள்ள கேலிச்சித்திரப் பாத்திரம். ''ஸ்டீம்போட் வில்லி'' (1928) எனும் திரைப்படம் முதன் முதலில் ஒலியுடன் திரையிடப்பெற்ற அவருடைய கேலிச்சித்திரப் படம். பிறகு நூற்றுக்கு மேற்பட்ட சிறு படங்கள் தோன்றின. இடப்புறம்: ஒரு வாஷிங்டன் அணிவகுப்பில் மிக்கி மவுஸ் பங்குபெறுகின்றது.

கினங்கள் அற்றுப் போயின. ஃபிலிப் ரோஜர் என்ற எழுத்தாளர், சில விலங்கினங்கள் அற்றுப் போனதற்கு வகைப்படுத்துதலே காரணம் எனக் கூறியுள்ளார். மிகப் பண்டைக் காலத்தில் அனைத்து விலங்குகளும் புனிதமானவையாகக்கருதப்பட்டன. இந்தக் கருத்து கிறித்தவ சமயத்தினால் வலுப்பெற்றிருக்க வேண்டும். ஒழுக்கமுறை சார்ந்து எழுதப்பட்ட இடைநிலைக் காலத்திய விலங்கியல் விளக்க ஏடுகளில் விலங்குகளின் விசித்திரப் பண்புகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. இந்த ஏடுகளில் 'முனைப்பான' விலங்கியல்புகளை இயம்புவது 18ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது. அதன் பின்பு பஃப்போன் என்ற ஃபிரெஞ்சு இயற்கை விஞ்ஞானி விலங்கு உலகுக்கும் மனிதன் உலகுக்குமிடையிலான முக்கிய வேறுபாடுகளைக் கூறினார். ''மனிதன் தனிச் சிறப்பான இயல்புடையவன். அவன் ஒரு தனி இனத்தைச் சேர்ந்தவன்'' என்று அவர் வலியுறுத்தினார்.

## வேட்டையாடுதல்

விலங்குகள் அற்றுப்போவது பற்றிய எந்த விவாதமும், அதற்குக் காரணமான வேட்டையாடுதலிலேயே கொண்டுபோய்விடும் மென்மயிர், தோல், தந்தம் ஆகியவற்றுக்காகப் பெரிதும் மதிக்கப்படும் விலங்குகள் உலகின் சில பகுதிகளில் திட்டமிட்டு, ஈவிரக்கமின்றி வேட்டையாடப்படுகின்றன. இந்த விலங்கினங்களுக்குப் பேராபத்து ஏற்பட்டிருப்பதால், இவற்றைக் காப்பாற்றுவதற்குச் சில ஒழுங்குமுறை விதிகள வகுக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த விதிமுறைகள் முழுமையாகச் செயற்படுத்தப்படுவதில்லை.

வேட்டையாடிவாழும் மக்கள் குழுமங்களுக்கும் விலங்குகளுக்குமிடையிலான உறவுநிலை பொதுவாக வேறொரு வகையைச் சேர்ந்தது. 'பிக் டிரவுட்' ஏரிப் பகுதிவாழ் சிவப்பிந்தியர்கள். சமயப் பிரச்சாரகர்கள வருவதற்கு முன்பு, தங்கள் குழுக்களுக்குப் பல்வேறு விலங்கினங்களின் பெயர்களைச் சூட்டிக்கொண்டிருந்ததை இமானுவல் டேஸ்வோ குறிப்பிட்டுள்ளார். இந்த முறையின் காரணமாக, எதிர்கால வேட்டைக் காரருக்கும், எதிர்கால வேட்டை விலங்குக்குமிடையே ஓர் ஆழமான உறவுநிலை உருவாகியது. முதலாவது வேட்டை விலங்கினைப் பிடித்ததும் ஒரு குறிப்பிட்ட சடங்கும் நடத்தப்பெற்றது.

இத்தகைய பழக்கங்கள் உலகெங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டவை அல்ல விலங்குகளைப் பாதுகாப்பது பற்றிய விவாதத்தைப் பல்வேறு அமைவனங்களும் தனிநபர்களும் எழுப்பியுள்ளனர். இந்த விவாதத்தில் மீண்டும் மனிதனுக்கும் விலங்குகளுக்குமிடையே எங்கே எல்லைக் கோட்டினை வகுப்பது என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. விலங்குகளின் உரிமைகள் குறித்தும், விலங்குகளைப் பாதுகாப்பதற்கான சட்ட வகைமுறைகளை வகுப்பதற்கும் சட்ட வல்லுநர்களின் கருத்துகள் கேட்கப்படுகின்றன. எந்த விலங்குகளைப் பாதுகாப்பது? விலங்குகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மதித்து நடக்கும்படி மனிதர்களை எவ்வாறு வற்புறுத்துவது?

## மனித - விலங்கு இயல்புகள்

விலங்குகளிடம் மனித இயல்புகளைக் காண்பதும், மனிதரிடம் விலங்கு இயல்புகளைக் காண்பதும் நேர்மாறான இரு சிந்தனை முறை

(தொடர்ச்சி 111 பக்கம் பார்க்க)

''தெ அனிமோ எ தெ ஹோம்'' (''அனிமல்ஸ் அண்டு மேன்'') எனும் நூலை இக்கட்டுரை தழுவியுள்ளது. நெஷாத்திலுள்ள (சுவிட்ஸர்லாந்து) இனவியல் அருங்காட்சியகம் வெளியிட்ட இந்நூல் 1987இல் அருங்காட்சியகத்தில் அதே தலைப்பில் நடைபெற்ற பொருட்காட்சிக்கு விளக்க நூலாகும். கடந்த 30 ஆண்டுகளில் நெஷாத்தல் இனவியல் அருங்காட்சியகம் புதுமுறைப் பொருட்காட்சிகளுக்குப் பெயர்பெற்றுள்ளது. 1981 முதல் அது அரிய பொருட்காட்சிகளை நடத்தி வருகின்றது. அவை பல்வேறு பண்பாடுகளின் கலைப்பொருள்களை அருகருகே வைப்பதால் பண்பாட்டு உறவு பற்றிய சிந்தனையைத் தூண்டுகின்றன.

**மாற்கு - ஒலிவியர் கோண்செத்** சுவிஸ் இனவியலார். 1983 முதல் 1987 வரை நெஷாத்தல் இனவியல் நிலைய அலுவலர். இப்போது பிலிப்பைனிலுள்ள இஃபுகாவே இனத்தவரிடையே ஆராய்ச்சி செய்து வருகின்றார்.



படிப்பகம்

www.padippakam.com

# கரடித் தாத்தா

**விக்டர் ஏ. ஷ்னிரெல்மன்**



ஒளிப்படம் ©: பதிப்புரிமை பெற்றது

''இந்தப் பூமியின் உட்பகுதிகளி
விருந்து, ஒரு முனையிலிருந்து மறு
முனைக்கு, காட்டுக்கலைமான் ஓடிக்
கொண்டிருக்கிறது. அதன் பாதை
சூரியனின் பாதை; அது சூரியனை
நோக்கி ஓடுகிறது. அது வெண்ணிற
மானது. அதன் உடல் பனியைவிட
வெண்மையானது. அது தன் கருங்
கழுத்தை உயரததில் நிமிர்த்தி நிற்கி
றது. அதன் கொம்புகள் பின்னோக்கி
இருக்கின்றன. கண்ணுக்குப் புல
னாகாத இறகுகளால் அது பறக்
கிறது. தங்குதடையின்றி நாற்புற
மும் வீசும் அதன் மூச்சுத்தான்
காற்று. அந்தக் காற்று அதனை
அதன் பறந்துசெல்லும் பாதையில்
தாங்கிச்செல்கிறது''.

இத்தகைய கவிதை நடையில்,
காவல் தெய்வமாகவும், வழிகாட்டி
யாகவும் கருதப்படும் பொன்கலை
மானை லாப்லாந்தியப் புராணங்கள்
வருணிக்கின்றன. வடக்கு யூரேசியா
வின் பல மக்களினங்கள் அண்மைக்
காலம் வரையில் விலங்குகளைப்
பாதுகாக்கும் ஆவிகளைப் பொறுத்
துத் தான் தங்கள் நற்பேறு அமைந்
திருப்பதாகவும், இந்த ஆவிகள்தாம்
விலங்குகளாகவும் பறவைகளாகவும்,
பல்வேறுவகை மீன்களாகவும் இருப்ப
தாக அவர்கள் கருதினார்கள். ஓர்
ஆவி, நாயின் தலையுடனும், காகத்
தின் கால்களுடனும் நீண்டுதொங்கும்
காதுகளூடனும் ஒரு விசித்திர விலங்
கின் உருவில் இருக்கும் என யாகுத்
மக்கள் நம்பினார்கள். விலங்குகளின்
இனப்பெருக்கத்திற்குக் காரணமான
கரடியின் கருணையி:ருந்தால்
வேட்டையில் தங்களுக்கு நல்ல
வெற்றிகிட்டும் எனச் சில மக்களினத்
தினரும் நம்பினர். வேறுசிலர் இரு
பெண்மான்கள்தாம் இந்த உலகைக்
கட்டுப்படுத்துவதாகக் கருதினார்
கள். மாத்தம் எனும் யானை பூமிக்
கடியில் உலவுவதாகவும், அது மூச்சு
விடுவதால் மலைகளும் குன்றுகளும்

எழுகின்றன என்றும் சிலர் நம்பினார்
கள்.

சில சமயங்களில், விலங்குகளைப்
பாதுகாக்கும் ஆவிகள், அண்டத்தின்
படைப்பாளர்கள் என்று ஸ்லாவிய
மக்களினங்களில் ஒரு நம்பிக்கை இன்
றும் நிலவுகிறது. எடுத்துக்காட்டாக
போலந்து மக்கள், துருவ நட்சத்
திரத்தை ''மரைமான் நட்சத்திரம்''
என்றும், ரஷியாவுக்கு வடக்கிலுள்ள
வர்கள், அண்மைக்காலம்வரை 'வட
மீன்குழு'வை ''மரைமான் குழு''
என்றே அழைத்தனர்.

இவையெல்லாம், மனிதர்களின்
தலைவிதி தெய்வ நிலையினரையே
பொறுத்திருக்கிறது என நம்பிய மக்
கள் வாழ்ந்த நீண்ட நெடுங்காலத்
திற்கு முந்தி நம்மை இட்டுச் செல்
கின்றன, அப்போது வேட்டையாடு
பவர்கள் ஆவிகளின் கோபத்தைத்
தணிக்க வேண்டியிருந்தது. ஆவி
களின் கோபத்தைத் தணிக்க வேண்டி
யிருந்தது. ஆவிகளின் கண்காணிப்
பின்கீழ் அவர்கள் தடைக்கட்டுகளை
யும், ஆணைகளையும் அனுசரிக்க
வேண்டியிருந்தது வேட்டைக்கான
ஆயத்தங்கள் இரகசியமாக நடை
பெற்றன. வேட்டைக்காரர்கள்
தங்கள் வேட்டைச் செயல்களை விவ
ரிக்க அனுமதிக்கப்படவில்லை. அவர்
கள் தாங்கள் வேட்டையாட விரும்
பும் விலங்கினைத் தெரிவிக்கவும்
தடை விதிக்கப்பட்டிருந்தது.

வேட்டை விலங்குகள் மரியாதை
யாக நடத்தப்பட்டன. சைபீரியா
வையும், வடஅமெரிக்காவையும்
சேர்ந்த பல மக்களினத்தினர் கரடி
யை ''முதியவர்'', ''பாட்டனார்'',
''பிரபு'', ''புனிதப் பிராணி'' என்று
அழைத்தனர். ஒரு கரடியைச் சுடு
வதற்கு முன்பு அதனுடன் நட்பாகப்
பேசி, 'எதிர்க்க வேண்டாம்' எனக்
கூறுவர். 'கெட்' இனமக்கள் ஒரு
கரடியை அதன் குகையிலிருந்து
வெளிவரச் செய்ததும், ''பாட்டனே!

யூரல் பகுதியிலுள்ள இக்கொளு
வியில் (கி.பி.4—5ஆம் நூற்றாண்டு)
பலியாகும் கரடியைக் காணலாம்
பண்டை நாளில் சைபீரிய, வட
அமெரிக்க வேடர்கள் வேட்டை
விலங்குகளைக் கனிவுடன் நடத்தி
னர். அவர்கள் கரடியின்மேல் அம்
பை எய்வதற்கு முன் அதை அன்பாக
''முதியவரே'', ''தாத்தா'', ''பிரபு''
என்றழைத்தனர்.

**பண்டைய**
**யூரேஷியப் பண்பாடுகளில்**
**வேட்டைச் சடங்குகளும்**
**விலங்கு வழிபாடும்**

www.padippakam.com



ஒளிப்படம் © பதிப்புரிமை பெற்றது

பின்னிய விசித்திர விலங்குகளுள்ள திறப்பு வேலைப்பாடமைந்த வெண்கலப் பதக்கம். கி.பி முதல் ஆயிரம் ஆண்டுகளின் பிற்பகுதியைச் சேர்ந்த இது யூரல் மலையில் பெர்ம் பகுதியில் கிடைத்தது.

கூறுவார். அவரே நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பார்; வானிலை முன்னறிவிப்பும் செய்வார் ஒவ்வொரு மதகுருவும் தனது மறுபடிவமாக ஒரு விலங்கினை வைத்திருந்தார். அது அவரைப் பாதுகாத்தது; அவருடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது. மதகுரு இந்த விலங்கின் வழித்தோன்றல் எனப் பலர் நம்பினர்.

மதகுரு ஒரு 'கிரீடம்' அணிந்திருப்பார். அதில் கலைமானின் கொம்புகள் இருக்கும். மானின் குளம்புகள் போன்ற காலணிகளையும் அவர் அணிந்திருப்பார். 'சுக்சி' என்ற இனத்தவர் ''ஓநாய்த் திருவிழா'' கொண்டாடுவர். அப்போது மத குருக்கள் ஓநாயின் முகம்போன்ற முகமூடிகளை அணிந்திருப்பர். ஒரு விலங்கின் முக்கிய ஆற்றல் அதன் மூக்கில் இருப்பதாகவும், இந்த முகமூடியை அணிவதன் மூலம் அதன் ஆற்றல் தமக்கு வந்துவிடும் என்றும் அவர்கள் நம்பினார்கள். மதகுரு வெறியாட்டு நிலையிலிருக்கும்போது ஒரு விலங்கைப்போல் நடந்துகொள்வார். கரடிபோல் உறுமுவார்; மான்போல் துள்ளுவார்.

விலங்குகளைப் பாதுகாக்கும் ஒரு



ஒளிப்படம் © பதிப்புரிமை பெற்றது

பெர்ம் பகுதியைச் சேர்ந்த இவ்வெண்கல வழிபாட்டுப் பொருள் (கி.பி. 5—10ஆம் நூற்றாண்டு) விலங்கின் முதுகில் நிற்கும் மனிதனைக் காட்டுகிறது.

கோபப்படாதே! எங்கள் விருந்தினராக இரு!'' என்று வேண்டுவர். ஒரு கரடியை அவர்கள் கொன்றுவிட நேர்ந்தால், ''எங்கள் மீது சினங்கொள்ளாதே. வேட்டைக்காரர்களைப் பழிவாங்கிவிடாதே!'' என்று கெஞ்சுவர். அதைக் கொன்ற குற்றத்திலிருந்து தப்புவதற்கு முயலுவர்.

பசியால் வாடும் மனிதனிடம் இரக்கங்கொண்ட கலைமான் தன்னைக் கொல்லும்படி அவனிடம் கூறியதாக ஒரு லாப்லாந்தியப் புராணம் கூறுகிறது. அது முதல், கலைமான்களை மக்கள் வேட்டையாடலானார்கள். அதே சமயம், கூதிர்ப்பருவத்தில் பெண் கலைமான்களையும், மான் கூட்டத்தின் தலைமை மான்களையும் கொல்லாதிருக்கும்படி புனிதமான் கூறியதாகவும் அந்தப் புராணம் கூறுகிறது. வனவிலங்குகளை கண்டபடி கொல்ல இது தடையாக அமைந்தது.

வேட்டையாடி விலங்குகளின் எலும்புகளையோ மண்டை ஓட்டையோ உடைப்பது சமய விரோதமானது என வட யூரேசியாவையும், வட அமெரிக்காவையும் சேர்ந்த பல மரபுக் குழுக்கள் நம்பின. அவர்கள் அவற்றை ஊசியிலைப் புதர்க்காடுகளில் கொண்டுபோய்ப் போட்டுவிடுவார்கள்; அல்லது மரங்களில் தொங்கவிட்டுவிடுவார்கள். இதன்மூலம் அந்தப் பிராணிகளை மீண்டும் உயிர்ப்புறச் செய்யலாம் என்று அவர்கள் நம்பினார்கள். வேறு சிலர், ஒரு கரடியை வேட்டையாடி அதன் இறைச்சியை உண்டபிறகு, அதன் எலும்புக்கூட்டை ஒருங்கிணைத்து, சில சடங்குகளைச் செய்த பிறகு, அதனை நடுக்காட்டில் கொண்டு போய்ப் போட்டுவிட்டு வருவார்கள். முதிய வேடர்கள் மந்திர சூனிய மதகுருவை அழைத்து, அவரிடம் ஆலோசனை கேட்பார்கள். அவர், எங்கே வேட்டையாட வேண்டும், எங்கே மீன்பிடிக்க வேண்டும், என்று

சைபீரியாவில் மான்சு இன மந்தரவாதியின் உடை (கி.பி. 9—15ஆம் நூற்றாண்டு). தலையணியிலுள்ள கொம்புகள் மந்திரவாதிக்கும்விலங்கு உலகிற்குமுள்ள நெருங்கிய தொடர்பை நினைப்பூட்டுகின்றன.



ஒளிப்படம் © பதிப்புரிமை பெற்றது

தெய்விக மானின் மந்திர மயிரை ஒரு மதகுரு திருடி, தனது மரபுக் குழுவினரின் பூமியில் வீசியதாகவும், அந்த மயிர்கள் விலங்குகளாக மாறியதாகவும் 'யாகுட்' இனத்தவரின் புராணம் கூறுகிறது. 'என்கானசன்' என்ற இனத்தவர், அன்னை பூமியை ஒரு பெண்மானாகக் கருதினர். அதன் மயிரிலிருந்து தாங்கள் தோன்றியதாக நம்பினர்.

துருக்கிய மொழி பேசும் நாடோடிகள், குதிரை மயிரின் அற்புத சக்தியில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அவர்களின் காப்பியக் கதைகளில் வரும் கதாநாயகன், இக்கட்டான சூழ்நிலைகளில் சிக்கும்போது குதிரையின் மயிருக்குத் தீயிடுவான். அந்த மயிர்கள் குதிரைகளாக மாறிவிடும் 'புரியாத்' இனத்தவர் வெள்ளைக் குதிரைகளின் மயிர்களை வசந்த காலத்தில் வெட்டித் தீயிடுவதற்கு ஒரு சடங்கு நடத்துவர். இந்தச் சடங்கு செழிப்பை உண்டாக்கும் என அவர்கள் கருதினர். 'டூவினியர்' என்ற இனத்தினர், தங்கள் கால்நடைகளை விற்கும்போது அவற்றின் சில மயிர்களைப் பிடுங்கி எரிப்பார்கள். இதன்மூலம் தங்களிடமிருந்த நற்பேறு அந்த விலங்குகளுடன் வெளியேறிவிடாமல் தடுக்கலாம் என அவர்கள் நம்பினார்கள்.

துருக்கிய—மங்கோலியக் காப்பியங்களில் போர்க் குதிரை வெகுவாகப் போற்றப்பட்டது. அது குதிரையாக மட்டும் இருக்கவில்லை. அதற்கு மந்திர சக்திகள் இருந்தன. அதற்கு இறகுகள் உண்டு; அது வானில் பறக்கும்; அது பறக்கும்போது விண்மீன்

(தொடர்ச்சி 11 பக்கம் பார்க்க)

**விக்டர் அலெக்சாண்ட்ரோவிச் ஷினிரெல்மன்** ரஷ்ய அறிவியல் கழகத்தின் மிக்லுக்கோ-மக்லாயா இனவியல் நிலைய அலுவலர்; இங்கு இவர் பண்டைய சமூகங்கள் பற்றி ஆராய்ந்து வருகிறார். 'கால்நடை வளர்ப்பின் தோற்றம்', 'பண்பாடுகளின் பாகுபாடுகளும் வேறுபாடுகளும்' ஆகியவை பற்றி நூல்கள் எழுதியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

# மக்களும் செல்லமான விலங்குகளும்

எரிக்கா ஃப்ரீட்மன்




ஒளிப்படம் ○ எதுவார்து பூபா, பாரிஸ்

செல்லப் பிராணிகளை வளர்க்கும் பழக்கம் எல்லா மக்களினங்களிலும் பரவியிருக்கிறது. மக்கள் 10.000 ஆண்டுகளுக்கு மேலாக வீட்டு விலங்குகளைப் பேணி வருகிறார்கள். நெடுங்காலமாக அவர்கள் காட்டு விலங்குகளைப் பிடித்துப் பழக்கித் தங்கள் தோழர்களாகப் பயன்படுத்தி வருகிறார்கள். விலங்குகளை வீட்டுப் பிராணிகளாக முதன்முதலில் எதற்காக மனிதர்கள் பழக்கினார்கள் என்பது தெரியவில்லை. எனினும், பிராணிகளை வளர்க்கும் பழக்கம் இடைக்கற்காலத்தில் முதலில் தோன்றியதாகத் தெரிகிறது. குறிப்பிட்ட பகுதிகளில் உணவுப் பொருள்கள் அதிகமாகக் கிடைத்து, சுற்றுப்புறச் சூழலும் சாதகமாக மாறியதன் காரணமாக இப்பழக்கம் தோன்றியிருக்கலாம். தொல்பொருள் சான்றுகளின்படி, வீட்டுப் பிராணியாகப் பழக்கப்பட்ட முதல் விலங்கு நாய்; அடுத்தது பூனை.

நவீனத் தொழில் சமுதாயத்தில் செல்லப் பிராணிகளின் முக்கியத்துவத்தை பத்திரிகைகளும், திரைப் படங்களும், நூல்களும் பரப்பி வருகின்றன. செல்லப் பிராணிகள்—குறிப்பாக நாய்கள்—மனிதனின் ''சிறந்த நண்பன்'' எனச் சித்திரிக்கப்படுகின்றன. செல்லப் பிராணிகள், தாய்க்கும் சேய்க்குமிடையிலான உறவு நிலையின்—முழுமையான அன்பு, பற்று, பாசம் அனைத்தின்—சின்னமாக விளங்குகின்றன. குழவிப் பருவத்திலிருந்து குழந்தைப் பருவத்திற்கு மாறுவதற்கும், சார்பு நிலையிலிருந்து சுதந்திர நிலையை அடையவும், தனிமையிலிருந்து சமூகத்துடன் ஒருங்கிணையவும், நம் வாழ்வின் பல்வேறு காலங்களிலும், கட்டங்களிலும் அவை உதவுகின்றன.

பத்தாண்டுகளுக்கு முன்புவரை மக்களுக்கும் செல்லப் பிராணிகளுக்குமிடையிலான செயல் விளைவுகளின நன்மைகள் குறித்து அறிவியல் முறையான ஆராய்ச்சிகள் நடத்தப்படவில்லை. மக்கள் வாழ்வில் செல்லப் பிராணிகளின் முக்கியத்துவத்தை ஃபிராய்டுவலியுறுத்தினார். ஆனால்,



படிப்பகம்

www.padippakam.com

செல்லப் பிராணிகளிடம் அவர் கொண்டிருந்த மதிப்பு மருத்துவ நோக்கில் இயப்பப்படவில்லை. செல்லப் பிராணிகளின் அனபுணர்வு, அறிவாற்றல், நன்றியுணர்வு குறித்து நிறையக் கதைகளும், சொந்த அனுபவங்களும் உள்ளன. ஆனால் இவற்றுக்கு அறிவியல் முறையான ஆய்வு ஆதாரம் ஏதுமில்லை.

கடந்த 10 ஆண்டுகளில் ''செல்லப் பிராணிகள் உங்களுக்கு நன்மை செய்யக் கூடியவை'' என்ற நம்பிக்கைக்கு அறிவியல் ஆதாரம் கிடைத்துள்ளது. செல்லப் பிராணிகள் அவற்றின் உரிமையாளர்களின் தனிமையைப் போக்கித் துணையாக இருக்கின்றன; கண்காணிப்பு உணர்வைப் பெருக்குகின்றன; ஆக்கமுறையான அன்றாட நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக விளங்குகின்றன; எசமானருடன் தொட்டு விளையாடி அவருடைய கவலைகளைத் தணித்து அவருக்குப் பாதுகாப்பு உணர்வை ஊட்டுகின்றன. எசமானருடன் விளையாடி அவரை உடற்பயிற்சியில் ஈடுபடும்படி செய்து அவரது உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் அவை உதவுகின்றன. உடல்நலத்தின் மீது விலங்குகளினால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி ஆராய்ச்சி நடத்துபவர்களில் பெரும்பாலோர் நாய்கள் மீது கவனம் செலுத்துகினறனர். மற்றச் செல்லப் பிராணிகளும் நாய்களுக்கு இணையாக நலன் விளைவிப்பவை என்பது தெரியவந்துள்ளது.

தனிமை நோயை உண்டாக்கலாம்; அல்லது நோயைக் கடுமையாக்கலாம்; சில சமயம் மரணத்தையும் விளைவிக்கலாம். குடும்ப உறுப்பினர்களின் அல்லது நெருங்கிய நண்பர்களின் தொடர்பு இல்லாமையால் ஏற்படும் நோயியல் விளைவுகளிலிருந்து எசமானருக்குச் செல்லப் பிராணி குணமளித்து அவரது உடல் நலத்தை வளர்க்கிறது. குறிப்பாக குடும்பத்திலிருந்தும் நண்பர்களிடமிருந்தும் பிரிந்து தனித்து வாழும் முதியவர்களுக்குச் செல்லப் பிராணிகள் சிறந்த நண்பர்களாக அமைகின்றன. அவர்கள் செல்லப் பிராணிகளைத் தங்கள் குடும்ப உறுப்பினர்களாகக் கருதுகிறார்கள்; மனிதர்களுடன் பேசுவது போன்றே அவற்றுடன் உரையாடுகிறார்கள்; தங்கள் இன்ப துன்ப உணர்வுகளை அவை உணர்ந்து கொள்வதாகக் கருதுகிறார்கள்.

கடுமையான இதயநோயாளிகள் செல்லப்பிராணி உரிமையாளர்களாக இருந்தால், மேலும் ஓராண்டு கூடுதலாக உயிர்வாழ்வதாக ஆராய்ச்சிகளிலிருந்து தெரியவந்துள்ளது. ஒரு நகர்ப்புறப் பல்கலைக்கழக மருத்துவ மனையில் இதய நோய்ச் சிகிச்சைக்காக ஓராண்டில் சேர்ந்த 53 பேர்களில் செல்லப் பிராணி உரிமையாளர்கள் மூவர் மட்டுமே ஓராண்டுக்குள்ளாக இறந்தனர். ஆனால், அதே காலஅளவின் போது செல்லப்பிராணி வளர்க்காத 39 பேர் இறந்தனர். முதியவர்களுக்கு மட்டுமின்றி திருமணமாகாதவர்கள், துணையை இழந்தவர்கள் ஆகியோ

''குழந்தைப் பருவத்தில் செல்ல விலங்குகள் விலங்குலகுடன் உறவு ஏற்படுத்துவதுடன், பிற உயிரினங்களை மதிக்கவும் கற்றுத் தருகின்றன
கீழே: பாரிஸ் பகுதியில் உயர் கட்டிடத்தினருகில் குறுகித் தோன்றும் நாயும் அதை வளர்ப்பவனும்



ஒளிப்படம்: சால்கடோ © மாகும், பாரிஸ்

வீட்டில் பூனை வளர்க்கும் பழக்கம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது பண்டைய எகிப்தில் பூனைக்குத் தீங்கிழைத்த எவரும் தண்டிக்கப்பட்டனர்; பூனை இறந்ததும் அதை வளர்த்தவர் துயரின் அடையாளமாக கண் புருவத்தை மழித்துவிடுவார். கீழே: இன்றைய பூனை அன்பரும் அவர் நண்பரும்.




ஒளிப்படம்: லாபத் © ஜாக்சனா, பாரிஸ்



படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம்: ஜோசஃப் கூடல்கா© மாக்னம், பாரிஸ்

மேலே: நாடோடி இளைஞனும் அவனது நான்கு கால் நண்பனும். செல்ல விலங்குகளை வளர்த்தல் மேல்நாட்டுச் செல்வரின் பழக்கமாக மட்டுமிராமல், உலக முழுவதுமுள்ள பல்வேறு பண்பாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும் பழக்கமாக இருக்கின்றது.

ருக்கும் செல்லப்பிராணிகள் நன்மை செய்கின்றன. இவர்களின் உடல் நலம், செல்லப்பிராணிகளை வளர்க்காத மற்றவர்களின் உடல் நலத்தை விட வெகுவாக ஆரோக்கியமாக இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். மற்றவர்களுடன் நட்புறவுகொள்ளத் துணை செய்யும் தோழனாகவும் செல்லப் பிராணி செயற்படுகிறது. மருத்துவ மனைகளிலும்; நிறுவனங்களிலும் முடங்கிக்கிடப்பவர்கள், வெளியுலகத்திலுள்ள நண்பர்களுடனும் உறவினர்களுடனும் தொடர்பு கொள்ளச் செல்லப்பிராணிகள் உதவுகின்றன. பல செல்லப்பிராணி உரிமையாளர்கள், தாங்கள் மருத்துவ மனையில் சிகிச்சைபெறும்போது தங்கள் செல்லப்பிராணிகள் பற்றிய தகவல்களை அன்றாடம் அக்கறையுடன் விசாரித்து அறிந்துகொள்கிறார்கள்.

தனிமையில் வாழ்கிறவர்கள் அல்லது பதிலுக்குப்பதில் அன்பைப் பெறாதவர்கள் அடிக்கடி விரக்தியடைவார்கள்; தாங்கள் புறக்கணிக்கப்படுவதாகவும், தாங்கள் சுய மரியாதையை இழந்துவிட்டதாகவும் கருதுவார்கள். இதனால், அன்றாட வாழ்வில் அறைகூவல்களை எதிர்த்துச் சமாளிக்கும் மனஉறுதியை இழக்கிறார்கள்; நோயை எதிர்த்துப் போராடும் ஆற்றலையும் அவர்கள் உடல் இழந்துவிடுகிறது. சிக்கல்களின் தாக்கம், ஏமாற்றங்கள், நண்பர்களின் மறைவு போன்ற துயர நிகழ்ச்சிகளினால் உண்டாகும் சோக உணர்வுகளைத் தணிக்கச செல்லப் பிராணிகள் உதவுகின்றன.

செல்லப் பிராணியைப் பேணிக் காக்கும்போது ஒருவர் தனது சொந்த மதிப்பையும் உயர்த்திக் கொள்கிறார்! அவர் தன்னைக் கவனித்துக் கொள்வதிலும் அக்கறை கொள்கிறார். அமெரிக்காவில் முதியவர்களிடையே நடத்திய ஓர் ஆய்வின் போது, செல்லப் பிராணி வளர்ப்பவர்கள் மற்றவர்களைவிட அதிகத் தன்னிறைவுடையவர்களாகவும், தற்சார்புடையவர்களாகவும், உதவும் மனப்போக்கு உடையவர்களாகவும். தன்னம்பிக்கை நிறைந்தவர்களாகவும், நல்லெண்ணம் உடையவர்களாகவும் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. ஓடின்பர்கில் முதியவர்களின் மரணத்திற்கு தோல்அழற்சி நோய் முக்கிய காரணமாக இருந்துவந்தது. ஒரு சமூக சேவகி தமது கவனிப்பிலிருந்த முதியவர்களை ஒரு செல்லப் பறவையை வளர்க்கும்படி ஊக்குவித்தார். குளிர்காலத்தில் திறந்தவெளி நெருப்பில் குளிர்காய்ந்தவர்களுக்கு, வெதுவெதுப்பான சூழல் தேவைப் படும் பறவைகளைக் கொடுத்தார். அவற்றை உயர்ந்த வெப்பநிலைகளில் பேணி வரும்படி அறிவுரை கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தனர். அவர்களில் எவருக்கும் அந்தக் குளிர் காலத்தின்போது தோல்அழற்சி ஏற்படவில்லை. இவ்வாறு எசமானர்களின் உடல்நலத்தைப் பாதுகாக்க அந்தச் செல்லப் பறவைகள் துணை புரிந்துள்ளன.

மனிதரின் தொடுஉணர்வு விழைவினை நிறைவு செய்வதிலும் செல்லப் பிராணிகள் முக்கியப் பங்கு கொள்கின்றன. ஒரு பிராணியைத் தொடுவதன் மூலம் ஒருவருடைய கவலையும் மனவருத்தமும் தணிகிறது. செல்லப் பிராணியைத் தடவிக் கொடுத்து அதனிடம் அன்பு செலுத்துவதன் வாயிலாக எசமானரின் இதய மண்டலத்திற்கு நற்பலன்கள் ஏற்படுகின்றன. செல்லப் பிராணியுடன் பேசாமல் எவரும் அதனை வளர்ப்பதில்லை. எனவே, செல்லப் பிராணியுடன் பேசி, அதனைத் தொட்டு பழகுவதன் மூலம் எசமானரின் இதய இயக்கம் சீரடைகிறது.

செல்லப் பிராணிகள் ஒருவகைப் பாதுகாப்புணர்வையும் மனஅமைதியையும் அளிக்கின்றன. செல்லப் பிராணி துணைவருமானால் பலர் பாதுகாப்புணர்வுடன் உலாவச் செல்கிறார்கள்; செல்லப் பிராணி வீட்டைக் காவல் காத்திடும் என்ற நம்பிக்கையில் அவர்கள் நண்பர்களைக் காணச் செல்கிறார்கள். துயரார்ந்த சூழ்நிலைகளில் பிராணிகள் இருக்குமானால் மக்களின் கவனம் அவற்றின்மேல் செல்கிறது. அப்போது அவர்களின் மனத்துயர் குறைகிறது. அதேபோல், மீன்தொட்டியில் மீன் நீந்துவதைப் பார்க்கும்போதும்

(தொடர்ச்சி III பக்கம் பார்க்க)

**எரிக்கா ஃப்ரீட்மன்** அமெரிக்கர்: நியூயார்க் நகரப் பலகலைக் கழகத்தின் புரூக்ளின் கல்லூரியில் உடல்நல, உணவூட்டவியல் இணைப் பேராசிரியர்; 40 அறிவியல் கட்டுரைகள் எழுதியுள்ளார்; அவற்றுள் பல செல்ல விலங்குகளை வளர்ப்பதால் ஏற்படும் உடலியல் விளைவுகளை ஆய்கின்றன,




படிப்பகம்

www.padippakam.com

# ஹான்ஸ் எனும் குதிரை

ஜேம்ஸ் செர்ப்பெல்




## 'பேசும் விலங்கைத்' தேடுதல்

குழந்தைகளுக்காக எழுதப்படும் நூல்கள், கதைகள் ஆகியவற்றில் 75% விலங்குகள் பற்றியனவாக அல்லது விலங்குகளை முக்கியப் பாத்திரங்களாகக் கொண்டனவாக இருக்கின்றன என்பது அண்மையில் அமெரிக்காவில் நடந்த ஆய்விலிருந்து தெரிய வருகிறது இவை பெரும்பாலும் மனிதச் சிந்தனைகளையும், உணர்வுகளையும் உடையனவாக இருக்கின்றன. பல சமயங்களில் அவை பேசவும் செய்கின்றன. குழந்தைகளுக்காக எழுதும் பெரியவர்கள் தங்கள்வாசகர்கள் மனிதப் பாத்திரங்களைவிடவிலங்குப்பாத்திரங்களுடன் தங்களை எளிதாக ஐக்கியப்படுத்திக் கொள்கிறார்கள் என ஏன் கருதுகிறார்கள்? விலங்குகளால் மனிதர்களைப்போல் பேச இயலாது என்பதைக் குழந்தைகள் எப்படியும் தெரிந்து கொள்ளப் போகிறார்கள். அப்படியிருக்க, விலங்குகளால் பேச முடியும் என்ற எண்ணத்தைக் குழந்தைகளிடம் அந்த எழுத்தாளர்கள் ஏன் வளர்க்கிறார்கள்? இதுபற்றிச் சிந்திக்கச் சிந்திக்க அதன் மர்மம் அதிகமாகிறது.

விலங்குகளும் மனிதர்களும் உரையாடுவதுபற்றிய கொள்கை விசித்திரமானதாயினும், இது இன்று நேற்று தோன்றியதன்று இலக்கியம் தோன்றுவதற்கு முன்பே இந்தக் கொள்கை நிலவி வந்துள்ளது. ஆஸ்திரேலிய ஆதிகுடிகள் போன்ற பழங்குடியினரின் புராணங்கள் ஒரு காலத்தில் மனிதர்களும் விலங்குகளும் ஒரு பொதுமொழியில் உரையாடிச் சரிநிகராக வாழ்ந்து வந்ததாகக் கூறுகின்றன. ஈடன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் அங்கிருந்த

www.padippakam.com



ஒளிப்படம்: ரோஜர் வியோல், பாரிஸ்

''விலங்குகளும் மனிதரும் உரையாடுவது எனும் கருத்து இலக்கியத்தை விடப் பழமையானது, பரவலானது... நோவா புறாக்களுடனும் காகங்களுடனும் நன்றாகப் பேசப் பழகியதால், தேடும் பணியில் அவற்றை வெளியே அனுப்ப முடிந்தது.'' இடப்புறம்: சுவிஸ் சித்திரக் கலைஞரும் செதுக்கோவியருமான ஜோஸ் ஆமன் 1564 இல் செய்த மரச் செதுக்கோவியத்தில் நோவாவின் பேழை.

டால்ஃபின் மீன்கள் அறிவுக்கும், விளையாட்டுக்கும், மனிதனிடம் காட்டும் அன்பிற்கும் பெயர்பெற்றவை. ஈசோப், ஹெரடோட்டஸ், மற்றும் பிற பண்டைய எழுத்தாளர்கள் அதை சிறுவரின் சவாரி விலங்காகவும், கடலில் மூழ்குவோரைக் காப்பாற்றும் விலங்காகவும் குறிப்பிட்டுள்ளனர். பல நூற்றாண்டுகளாக மாலுமிகள் தம் கப்பலைச் சுற்றி டால்ஃபின்கள் குதிப்பதை இன்பப் பயணத்தின் அறிகுறியாகக் கருதினர். வலப்புறம்: டீலாஸ் எனும் கிரேக்கத் தீவில் கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பளிங்குக் கல்லில் 'டால்ஃபின் மேல் அமர்ந்துள்ள காதல் தெய்வம்.

மற்றப் பிராணிகளுடன் உரையாடிச் சகவாழ்வு நடத்தியதாக விவிலியக் கதைகள் உணர்த்துகின்றன நோவா கூட, புறாக்களுடனும், அண்டங் காக்கைகளுடனும் உரையாடுந்திறன் பெற்றிருந்ததாகவும் அவற்றை அவன் தேடும் பணிகளில் ஈடுபடுத்தியதாகவும் கதைகள் கூறுகின்றன.

ஐரோப்பாவில் இடைக்காலத்தில், விலங்குகளுடன் உரையாடுந்திறன், அடியவர்களுக்குரிய ஒரு சிறப்புப் பண்பு எனக் கருதப்பட்டது· கிறித்தவப் புனிதர்கள் பல பறவைகளுடனும், விலங்குகளுடனும் பேசுந்திறன் பெற்றிருந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன அசிசிப் புனிதர் ஃபிரான்சிஸ் பறவைகளுக்கு அருட்போதனைகள் செய்தார். அவர் ஓநாய்களைப் பழக்கினார்; குயில்களுடன் சேர்ந்து பாடினார் குருவிகளுடன் உரையாடினார்; தவளைகளுடன் பேசினார் என்பர். இன்றைய அறிவியல் நோக்கில் இத்தகைய கதைகள் நம்ப முடியாத கற்பனைகளாகத் தோன்றும். எனினும், விலங்குகளுடன் மனிதரும், மனிதருடன் விலங்குகளும் உரையாடுவது பற்றிய எண்ணம் அன்றுபோல் இன்றும் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

கிளவர் ஹான்ஸ்' என்ற குதிரை பற்றி மிக அண்மையில் வெளிவந்துள்ள செய்தி இந்தக் கொள்கைக்கு மீண்டும் உயிரூட்டியிருக்கிறது· இந்தக் குதிரை, இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜெர்மனியிலிருந்த வில்ஹெல்ம் வான் ஆஸ்டென் என்ற தலைமை ஆசிரியருக்குச் சொந்தமானது. தமது குதிரை அற்புதமான அறிவுத்திறன் வாய்ந்தது என அவர் நம்பினார். அவர் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் அதே உத்திகளைப் பயன்படுத்தி எளிய கணக்குகளைச் செய்வதற்கு அக் குதிரைக்குக் கற்பிக்கலானார் அவர் எதிர்பார்த்ததைவிட அதிகத் திறமையாகவே அது கணக்குகளைச் செய்யக் கற்றுக்கொண்டது. பதினொன்றிலிருந்து ஆறைக்கழித்து விடைகூறும்படி சொன்னபோது, அது தனது வலது முன்காலால் தரையில் ஐந்து தடவைத் தட்டிச் சரியான விடையைத் தெரிவித்தது. மிக அரிதாகவே அது பெரும்பிழைகளைச் செய்தது. இந்த மதிநுட்பம் வாய்ந்த குதிரை பற்றிய செய்தி ஐரோப்பா முழுவதும் பரவியதும், அது ஓர் அதிசயப் பிறவியாகக் கருதப்பட்டது இதைப் பார்க்க தொலைதூரங்களிலிருந்து பார்வையாளர்கள் ஏராளமாக வந்தார்கள். அவர்கள் அனைவருமே, இந்தக் குதிரை உண்மையிலேயே மதிநுட்பம் வாய்ந்ததுதான் என்று வியந்து சென்றார்கள். இதில் ஏதோ தந்திரம் இருக்கிறது என ஐயுற்ற பல புகழ்பெற்ற விஞ்ஞானிகள்கூட, இந்தக் குதிரையின் எசமானர், அதன் கண்ணில் படாமல் புறத்தே இருந்த போதுங்கூட அது மக்களின் கேள்விகளுக்குச் சரியான பதிலைத் தெரிவித்தது கண்டு வியந்தனர். இக் குதிரையின் புகழ் மேலும் பரவியது.

ஆனால், இந்நிலை நெடுநாள் நீடிக்கவில்லை. ஸ்டம்ப், ஃபங்கஸ்ட் என்ற இரு பேராசிரியர்கள், ஹான்ஸ்



படிப்பகம்

www.padippakam.com

# வனவிலங்குகள் ஏன் தேவை?



ஒளிப்படம் நார்மன் மையர்ஸ் © டபிள்யூ. டபிள்யூ. எஃப். கிளாண்டு, சுவிட்ஸர்லாந்து

தொழில்நுட்பம் மிக முன்னேற்றமடைந்துள்ள காலமிது. மின் அணுப் பொறிகளும், தொலைக்காட்சியும் ஒலியினும் விரைந்து செல்லும் வானூர்திகளும், அணுஉற்பத்தி நிலையங்களும் மிகுந்த இக்காலத்தில் காட்டு விலங்குகளையும், மரஞ்செடிகளையும் நாம் ஏன் மதிக்க வேண்டும்? வில், அம்பு, குதிரைச் சவாரி காட்டுத்தீ ஆகியவைபோல இவை வழக்கிலிருந்து அழிந்து விடவில்லையா?

உண்மை அதுவல்ல. விலங்குகளும் செடி கொடிகளும் தொடர்ந்து வாழ வேண்டுவது—நமக்கும் ஒரு வாழ்க்கைத் தேவையாகும். ஒவ்வொரு மனிதனும் தனது நல்வாழ்வுக்காக, அன்றாடம் இவற்றைச் சார்ந்தே நிற்க வேண்டியிருக்கிறது.

விலங்குகளும், தாவரங்களும் மனித நலனுக்கு மூன்று வழிகளில் உதவுகின்றன. மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளைத் தருகின்றன நாம் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, உலகின் பல பகுதிகளில் வாழும் இல்லங்களுக்குத் தேவையானவை, ஒளி தருவதற்கும், உணவு சமைப்பதற்கும் தேவையான எரிபொருள்—இவற்றைத் தருகின்றன. இவற்றுக்கான அடிப்படை அறிவைத் தந்து, மீண்டும் மிகப் பழங்காலத்திற்கு நாம் திரும்பிவிடாமல் இருக்க உதவுகின்றன. நம்மைச் சுற்றியுள்ள இயற்கையை சுவைப்பதற்கும் நமது பொழுது போக்குக்கும், உலகின் வியத்தகு உண்மைகளையும் இரகசியங்களையும் உணர்ந்து கொள்ளவும் இவை உதவுகின்றன.

விலங்கு, தாவரங்கள் இவற்றின் உயிர்க்கூறுகள் மனிதனுக்கு இன்றியமையாதவை. அவை பெருமளவில் அழிக்கப்படுவது அச்சந்தருகிறது. இதன் காரணமாகவே எட்டு ஆண்டுகளுக்கு முன்னர், இயற்கைப் பாதுகாப்புக்கான அனைத்துலக இயக்கம் (IUCN) உலக வனவிலங்கு நிதியமைப்பு ஆகியவை இணைந்து, புதிய பாதுகாப்பு உத்திகளை மேற்கொண்டன. இதன் மூன்று நோக்கங்கள்:

(1) விலங்கு, தாவர வகைகளைப் பாதுகாத்து, குறிப்பிட்ட அளவு இருப்பில் வைத்துக் கொள்வது—ஏனென்றால் இவற்றில் பெரும்பாலானவையின் மதிப்பு நமக்குத் தெரிவதில்லை. உதாரணமாக, மடகாஸ்கரில் உள்ள ஒரு மூலிகை, புற்று நோய்க்கு மருந்தாக இருக்கும் உண்மையை அண்மையில்தான் நாம் அறிந்து கொண்டோம்.

(2) மனிதனுக்கு மிகவும் தேவையான தாவர வகைகளின் இருப்பைப் பெருமளவில் வைத்துக் கொள்வது—அவற்றைப் பயிரிட்டு அறுவடை செய்து காலவரையறை இன்றிப் பயன்படுத்துவது.

(3) தூய்மையான காற்று, நீர், மண்வளம் இவற்றைப் பராமரிப்பது.


இம்மூன்று நோக்கங்களும் சாதாரணமானவை. ஆனால் தற்போது நிலவும் சமுதாய சூழ்நிலை காரணமாக, அரசினாலும் தனி மனிதராலும் புறக்கணிக்கப்பட்டு

''எல்லா விலங்குகளும் அழிந்துவிடுமெனில், மனிதன் தனிமையில் இறந்துவிடுவான். ஏனெனில் விலங்குகளுக்கு நிகழ்வதெல்லாம் மனிதனுக்கும் நிகழ்கின்றது. எல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. பூமிக்கு நிகழ்வது பூமியின் மைந்தருக்கும் நிகழும்'. இவை ஸீத்தல் எனும் இந்தியர் அமெரிக்க குடியரசுத் தலைவருக்கு 1855இல் எழுதிய கடிதத்திலுள்ள சொற்கள், மேலே: ஆஃப்ரிக்க யானைக் கூட்டம். யானைகள் வாழும் இடங்களில் அவற்றைத் தந்தத்திற்காக வேட்டையாடுகின்றனர். ஆஃப்ரிக்காவில் அண்மையில் யானைகளின் தொகை குறைந்துவிட்டது.



படிப்பகம்

ரிச்சர்டு ஃபிட்டர்



ஒளிப்படம்: ஜே. எஸ்லர் © டபிள்யூ. டபிள்யூ. எஃப்., கிளாண்டு, சுவிட்ஸர்லாந்து

''விசுனா' எனும் அசைபோடும் பாமா இன விலங்கு உயர் ஆண்டீஸ் மலைப் பகுதியில் வாழ்கின்றது. அதன் அரிய வெப்பந்தரும் ரோமத்தை வடஅமெரிக்கரும் ஐரோப்பியரும் மிகுத்யாக விரும்பினர் ஆகவே இவ்விலங்குகள் பலவறறைக் கொன்றனர் அதனால் இவ்வினம் அழியும் நிலை ஏற்படவே 1960களில் இதைக் காக்க பெரு நாடு முயற்சி மேற்கொண்டது.

வருகின்றன. இதைத் தவிர்த்து, நமது நன்மைக்கு இவற்றைப் பயன் படுத்துவது எப்படி?

பலவகைத் தாவரம், விலங்குகளின் அழிவுக்குக் காரணங்கள் இரண்டு. மிக அதிகமாகப் பயன்படுத்துதலும், குடியிருப்புக்கள் உருவாதலும் ஆகும்.

அதிகமாக வேட்டையாடுதல்—வரலாற்றில் முக்கியமாக இவ்வினங்களின் அழிவுக்குக் காரணமாக இருந்திருக்கிறது. வட அமெரிககாவில் கடந்த நூற்றாண்டில், பயணப் புறாக்களும், காட்டெருமைகளும் அழிவதற்கு அதிகமான வேட்டையாடுதலே காரணமாக இருந்திருக்கிறது. இந்த நூற்றாண்டில் ஆஃப்ரிக்காவில், கருப்புக காண்டாமிருகங்களும், யானைகளும் அழிந்து வருவதற்குக் காரணம். அவற்றின் கொம்புகளுக்காகவும், தந்தத்திற்காகவும், கள்ளத்தனமாக இவற்றை வேட்டையாடுதலே காரணமாகிறது.

சர்வதேச, திமிங்கிலக் குழுவின் கண்காணிப்பையும் மீறி, தென் கடற்பகுதிகளில் பெரிய திமிங்கிலங்கள் வேட்டையாடப்படுகின்றன. அவற்றின் எண்ணிக்கை வர்த்தகம் காரணமாகக் குறைந்துவிட்டன. திமிங்கில வேட்டை தடை செய்யப்பட்டுவிட்டது. எனவே அதனைச் சார்ந்த தொழில்கள் நசிந்துவிட்டன. உலக முழுதும் கடல்மீன்கள் குறைந்துவிட்டன. எனவே மனிதன் பயன்படுத்துவதற்கு இவை கிடைக்கவில்லை. அண்டார்டிகா மற்றும் அதன் உட்பகுதிகளில்தான் உலகிற்குத் தேவையான அதிக அளவு மீன்கள கிடைக்கின்றன. தற்போது அண்டார்டிக் ஒப்பந்தப்படி தற்போது மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இவற்றைப் பாதுகாப்பு அளிக்குமா? அல்லது மிகவும் தாமதமாகிவிட்டதா?

இன்று, வளர்ந்துவரும் நாடுகளில் குடியிருப்புக்காக காடுகளை அழிப்பது—விலங்கு மற்றும் தாவர இனங்களின் அழிவுக்குப் பெரிதும் காரணமாகி வருகிறது. பெருகிவரும் மக்கட்தொகை, மரம் மற்றும் பயிர்நிலத் தேவைகளை அதிகமாக வேண்டி நிற்கிறது. பிளாரிடாவை சார்ந்த ஒருவர்—தன் மாவட்டத்தில் புலியினம் குறைந்து வருவதைப் பற்றி வருந்திக் கூறுகையில் ''இங்கே சதுப்பு நிலத்தைவிட மிக அதிகமாக மனிதர்களே இருக்கிறார்கள்'' என்கிறார். ஒரு நிமிடத்திற்கு பத்து ஹெக்டேர் வெப்பக்காட்டுப் பகுதி அழிந்து வருகிறது என்பது மதிப்பிடபபட்டுள்ளது. இந்த அளவில் கணக்கிட்டுப் பாாத்தால் இந்த நூற்றாண்டு முடிவதற்குள் தேசியப் பூங்கா, மற்றும் சரணாலயங்களைத் தவிர இப்போதுள்ள 2-3 மில்லியன் ஹெக்டேரில் எதுவும் மிஞ்சாது என்று தோன்றுகிறது. சுற்றுப்புறத் தூய்மைக்கேடு முக்கியமான ஒன்றாகும். தொழிற்சாலை மற்றும் பயிர்த் தொழில் கழிவுகளிலும், மோட்டார் வாகனப் பயணங்களாலும், காற்றும், மண்ணும் நீரும் தூய்மைக்கேடு அடைந்து வருகின்றன. இரசாயன மாறுதலால் ஏற்படும் ''அமில மழை'' காடுகளையும், நனனீா மீன் இனத்தையும் வட பகுதியில் அழிந்து வருவதைப் பலர் இன்னமும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. ஒரேயடியாக அளவுக்கு மீறிப் பயன்படுத்துவதைத் தவிர்க்க, பயிரிடுதலும்—அறுவடை செய்வதிலும் வரைமுறைகளை ஏற்படுத்த வேண்டும். வர்த்தகத்திற்காக மரம் வெட்டுதல், வேட்டையாடுதல் இவற்றுக்கு அனுமதி முறையும், கட்டுப்பாடும் ஏற்பட வேண்டும். இது சட்டங்கள் மூலமாகத் தீர்க்கப்



படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம் பியர் ஜெக்தெல்லியர் © ஜக்கானா, பாரிஸ்

ஆஃப்ரிக்க வடவெள்ளைக் காண்டா மிருகத்தை அதன் கொம்புக்காக வேட்டையாடுவதால் அது அழியும் நிலையிலுள்ளது. 1980களின் தொடக்கத்தில் அதன் தொகை 700க்குப் குறைவானது. ஸாயரில் 500000 ஹெக்டேர் பரப்புள்ள கரம்பா தேசியப் பூங்காவில் இன்று மிகுதியான வட வெள்ளைக் காண்டா மிருகங்கள் வாழ்கின்றன.

இந்த அரேபிய மான் வகை முன்னால் அரேபியா, சிரியா, மெசபொட்டேமியா ஆகிய மாலைப் பகுதிகளில் பரவலாக வாழ்ந்து வந்தது மிகுதியாக வேட்டையாடப் பட்டதால் 1972க்குக் இது அறிந்துவிட்டது. நல்லவேளையாக அதற்கு முன் ஒரு சில பிடிக்கப்பட்டு இனப்பெருக்கம் செல்யப்பட்டது.



ஒளிப்படம்: ஜெச். ஜங்கியஸ் டபிள்யூ. டபிள்யூ. எஃப், கிளாண்டு, சுவிட்சர்லாந்து

படவேண்டிய பிரச்சினை. தேசியப் பூங்காக்களில்கூட சட்டம் மீறி வேட்டையாடுவோர் இருப்பதையும், திமிங்கிலம் தொடர்பான தொழில் நசித்து வருவதையும் பாருங்கள்.

இவற்றின் எண்ணிக்கையைக் கணக்கெடுப்பதும் ஒரு பிரச்சினையே. அனைத்துலக வனவிலங்குகள் இயக்கத்தில் குறிப்பாக திமிங்கிலங்களைப் பற்றி கவனம் கொள்ள ஒரு குழு உண்டு. இவற்றைப் பாதுகாத்தலைக் கண்காணிக்கும் பொருட்டு ஒரு மையம் உள்ளது. இது எல்லா இனங்கள் பற்றியும் சரியான புள்ளி விவரங்களைத் தயாரித்துள்ளது. சர். பீட்டர் ஸ்காட் என்பவர் தயாரித்துள்ள சிவப்பு விவரப் புத்தகத்தை வெளியிடும் பொறுப்பினை இம்மையம் ஏற்கிறது இம்மையத்தில்—அழிந்துவிடும் நிலையில் உள்ள இனங்களைப் பற்றிய விவரங்கள் உள்ளன.

தேசியப் பூங்கா அமைத்தல், சரணாலயம். இயற்கைப் பாதுகாப்பு ஆகியவை வனவிலங்குகளை அழிவிலிருந்து காக்கும் முக்கிய ஆயுதமாக விளங்குகிறது. மழைக்காடுகளின் அழிவினால், நசிந்துவரும் ஆயிரக் கணக்கான உயிரினங்களைப் பாதுகாக்க, தேவையான நிலப்பகுதிகளை அடுத்த பன்னிரண்டு ஆண்டுகளில் ஒதுக்க முடியுமா? இம்மாதிரி அழிவை எதிர்நோக்கியுள்ள உயிரினங்கள் பலகோடிக்கணக்கானவை. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் முப்பது மில்லியன் வகை உயிரினங்கள் இந்நிலையில் உள்ளன.

உலக வனவிலங்கு நிதியமைப்பும் அனைத்துலக இயற்கைப் பாதுகாப்பு (IUCN) அமைப்பும் இதற்குப் பெரும் பொறுப்பேற்கின்றன. இவற்றின் தலைமை அலுவலகம் ஸ்விட்சர்லாந்தில் உள்ளது. ஐ நா சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு இவ்விரண்டிற்கும் பெரிதும் உதவுகின்றது. பறவைகளைப் பாதுகாக்கும் பொருட்டு அனைத்துலகப் பறவைப் பாதுகாப்புக்குழு செயல்படுகிறது. இது, உலக வனவிலங்கு நிதியின் உதவியுடன் இங்கிலாந்திலிருந்து இயங்குகிறது

அனைத்துலக இயற்கைக் காப்பு ஒன்றியம் (IUCN), அறிவியல் வல்லுநர்களின் ஆறு குழுக்களின் உதவியுடன் இயங்குகிறது. உயிரினப் பாதுகாப்புக்குழு—தாவர விலங்கு வகைகளைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. தொண்ணூறுக்கும மேற்பட்ட வல்லுநர் குழுக்களின் உதவியுடன் செயல்படுகிறது இதற்கென உலகெங்கிலுமிருந்து இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட விலங்கியல் மற்றும் தாவரஇயல் விஞ்ஞானிகள் பணிபுரிகிறார்கள். ஆஃப்பிரிக்க யானை, காண்டாமிருகம் கொம்புமான், பூனை, முதலைகள், கடல் ஆமை, கொத்துப்பூக்கள் ஆகியவைபற்றி ஆய்கிறார்கள். அனைத்துலக அளவில், அழிந்துவரும் இனங்கள் பற்றிய மாநாடுகளில் இவர்கள் பங்கேற்கிறார்கள். கிளிகள். பிளெமிங்கோ, மற்ற பறவை பற்றிய ஆராய்ச்சி செய்யும் குழுங்களுடன் இணைந்து செயல்படுகிறார்கள்.

இவற்றின் குடியிருப்பு. சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகளைப் பற்றியும், தேசியப் பூங்காக்கள் பற்றியும் சரணாலயம் பற்றியும் ஆராயும்

படிப்பகம்

www.padippakam.com

மேலும் இரண்டு குழுக்கள் உள்ளன. யுனெஸ்கோவில் மனிதனும் உயிரியல் மண்டலமும் எனப்படும் திட்டமும் இப்பாதுகாப்பு முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கிறது. உலக மரபுக்குழு, நன்செய் நிலத்தின் நலன்விழையும் ரம்சர்குழு இவையும் இவற்றுக்குப் பேருதவிபுரிகின்றன.

அனைத்துலக இயற்கைப் பாதுகாப்பு மையத்தின்கீழ் அரசு சார்பற்ற பல அமைப்புகள் செயல்படுகின்றன. பம்பாய் இயற்கைக் குழு இவற்றில் ஒன்று. லண்டன் தாவரப் பாதுகாப்புக் குழு, பிராங்க்பர்ட் விலங்கியல் குழு. இவை இவற்றுக்கு உதாரணமாக விளங்குகின்றன

அனைத்துலக இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் (IUCN) போலன்றி, உலக வனவிலங்கு நிதியும், ICBPயும், தேசிய அமைப்புகளின் மூலமாகவே செயல்படுகின்றன. இவை அனைத்துலக அளவில் பரவியுள்ளன. வனவிலங்கு நிதி (WWF) முக்கியமான நிதி சேர்க்கும் அமைப்பு தனது பணிகளுக்காகவே நிதி சேர்க்கிறது.

இங்கிருந்து எங்கே போகிறோம்? இந்த தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகள் நமது நோக்கத்திற்கு எந்த அளவு உதவ முடியும்?

நாம் இத்துறையில் இப்போது செய்வதைப்போல இன்னும் பல மடங்கு செய்ய வேண்டும். தாவர, விலங்கினங்கள் வசிக்கத் தனியே போதுமான இடம் ஒதுக்கவேண்டும். 2 பெரிய திட்டங்களைத் திட்டும் போது உயிரினங்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

வனவிலங்குகள் அளவுக்கு அதிகமாக வேட்டையாடப்படுவதைத் தவிர்க்க வேண்டும். பாதுகாக்கப்பட்ட இடங்களைத் தவிர மற்ற பகுதிகளிலும், சட்டத்திற்கு புறம்பாக வேட்டையாடுதலைத் தடைசெய்யவேண்டும் எல்லாவற்றிற்கும் மேலாக, திட்டம் தீட்டுவோர், முடிவெடுப்போர், அரசியல்வாதிகள மட்டுமின்றி, மற்ற சாதாரண மக்களையும், கிராமவாசிகளையும், நகர மக்களையும், இப்பணியில் ஈடுபடச் செய்யவேண்டும். அவர்களுடைய நல்லெண்ணமும் அவர்களது உண்மையான நலனுக்கு உகந்த தேவைகள் அவர்களிடமே உள்ளன என்ற உணர்வுமே — இப்பணியின் வெற்றிக்கு உதவுகின்றன.

தமிழில்: எஸ். சம்பத்குமார்

**ரிச்சர்டு பிட்டர்** பிரிட்டிஷ் இயற்கையிலார்; நூலாசிரியர்; பன்னாட்டு இயற்கை, மற்றும் இயற்கை வளப் பாதுகாப்புச் சங்கத்தின் உயிரினக் காப்புக் குழுவில் 24 ஆண்டுகளாக உறுப்பினர்; அதன் செயற்குழுவின் இன்றைய தலைவன். ''வைல்டு லைஃப் ஃபார் மேன்'' எனும் இவரது 29ஆம் நூல் உலகப் பாதுகாப்புத் திட்டத்தின் உயிரினக் காப்பு பற்றியது; 29ஆம் நூல் குளிர்காலத்தில் வடமேற்கு ஐரோப்பிய கிராமங்களுக்கு உதவும் துணைநூல். இது செப்டம்பர் 1988இல் வெளியாகும்,

*வெப்ப மண்டலக் காடுகளில் காணப்படும் பச்சை ஆமை அதன் இறைச்சி, முட்டை, சுற்றுலாப் பயணிகளின் நினைவுப் பொருளாகப் பயன்படும் ஓடு ஆகியவற்றிற்காக மிகுதியாகப் பிடிக்கப்படுகின்றது. இதனால் ஆமைகளின் தொகை குறைந்துவிட்டது; சில பகுதிகளில் மறைந்துவிட்டது. வலப்புறம்: பச்சை ஆமைக் குட்டிகள்*

## மறைந்துவரும் இனங்களில் கள்ள வாணிகம்


ஆண்டுதோறும் நடைபெறும் கோடிக்கணக்கான டாலர் மதிப்புள்ள உலக வனவிலங்கு வாணிகம் பல விலங்கு, தாவர இனங்கள் நலிவுறக் காரணமாக இருக்கின்றது. வாணிகத்திற்காக அவற்றைப் பயன்படுத்துவது எவவளவு மிகுதியாகிவிட்டதென்றால். வனவிலங்குகளைப் பாதுகாத்து. மறைந்துவரும் இனங்களில் நடைபெறும் வாணிகத்தைத் தடுப்பதற்காக 1973இல் ஒரு பன்னாட்டு ஒப்பந்தம் தீட்டப்பெற்றது

மறைந்து வரும் வனவிலங்கு தாவர இனங்களில் பன்னாட்டு வாணிகம் பற்றிய ஒப்பந்தம் ஜூலை 1, 1975இல் நடைமுறைக்கு வந்தது. இன்று இதில் 96 உறுப்பு நாடுகள் உள்ளன. இவ்வொப்பந்தத்தைச் செயல்படுத்துவது இந்நாடுகளின் பொறுப்பு. இவை மறைந்துவரும் இனப் பட்டியலிலுள்ளவற்றில் வாணிகத்தைத் தடைசெய்து. இனி மறையக்கூடியவற்றில் வாணிகத்தை ஒருங்குப்படுத்தவேண்டும். சுவிட்ஸர்லாந்திலுள்ள இவ்வொப்பந்தச் செயலகத்திற்கு அரசாங்கங்கள் வாணிகப் பதிவேடுகள் உட்பட அறிக்கைகளை அனுப்ப வேண்டும்.

வனவிலங்கு வாணிகத்தில் பல்வேறு உயிரினங்கள் உயிருடனும், பொருளகளாகவும் அனுப்பப்படுகின்றன செல்ல விலங்குகளையும் அலங்காரச் செடிகளையும் அனுப்புவதற்காக ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான உயிருள்ள விலங்குகளும் செடிகளும் கப்பலில் ஏற்றப்படுகின்றன கம்பளி ரோகம், தோல், தந்தம். மற்றும் இவற்றில் செய்யப்படும் பொருள்கள் பெருமளவில் அனுப்பப்படுகின்றன,

இவ்வொப்பந்தம் மறைந்து வரும் இனங்களுக்கும், மறையக்கூடிய இனங்களுக்கும் பாதுகாப்பு அளிக்கின்றது. வாலில்லாக் குரங்கு. லெமுர் குரங்கு. பெரிய கரடி பல தென் அமெரிக்க குரங்குகள் பெருந் திமிங்கலங்கள், சிறுத்தை, புலி ஆகிய யானைகள், காண்டா மிருகங்கள், பல கொடிய பறவைகள், கொக்குகள். நீண்டவால் கோழிகள். கிளிகள். கடலாமை, சில வகை முதலைகள், பெரிய பல்லிகள் ஆகியவை முதல் வகைப் பட்டியலிலுள்ளன.

வாணிகத்தைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தாவிடில் அழியக்கூடிய இனங்கள் இரண்டாம் வகையைச் சேர்ந்தவை. ஏற்றுமதி செய்யும் நாட்டின் இணக்கத்துடன் இவ்வகை இனங்களில் பன்னாட்டு வாணிகம் அனுமதிக்கப்படுகின்றது முதல் வகைப் பட்டியலில் இடம் பெறாத உயர் குரங்கினங்கள், பூனை, நீர்நாய், திமிங்கிலம், டால்ஃபின் மீன்கள் கடற்பன்றி, கொடிய பறவைகள், ஆமை. முதலை, ஆஃப்ரிக்க யானை, சீல் மீன், எழில் கோழியினங்கள் போன்றவை இரண்டாம் பட்டியலிலுள்ளன.



ஒளிப்படம்: ரஸ்கின் ஒளிப்பட ஆராய்ச்சியாளர் நிறுவனம், நியூயார்க்



படிப்பகம்

www.padippakam.com

## ஓநாய்—



ஒளிப்படம் © பதிப்புரிமை பெற்றது

ஓநாய் தீங்கிழைப்பதாகக் கருதப்பட்டதால், அது செய்யாத குற்றங்களெல்லாம் அதன்மேல் சுமத்தப்பட்டன. 18ஆம் நூற்றாண்டில் ''கேவோதான் விலங்கு'' 100 பேரைக் கொன்று 30 பேரைக் காயப்படுத்தி தென் ஃபிரான்யை அச்சுறுத்திய போது, மிகப் பெரிய ஓர் ஓநாய்தான் அதற்கு காரணமென மக்கள் கருதினர் அக்கொடிய செயல்களை மனிதனே செய்ததாக இன்று சான்று கிடைத்துள்ளது. மேலே: ''கேவோதன் விலங்கை''க் காட்டும் இன்றைய சித்திரம்.

# மனிதன் புனைந்த பலிகடா

**தானியல் துப்வா**

ஆதியில் இயற்கையுடன் மனிதன் ஓர் ஒப்பந்தம் செய்துகொ·ண்டான். அனைத்து விலங்குகளும்—வீட்டு விலங்குகள் மட்டுமின்றி, ஆபத்தான விலங்குகள் கூட—புனிதமானவையாகக் கருதப்பட்டன. அவற்றைக் கொல்வதும், உண்பதும் தண்டிக்கப் படத்தக்க கொலைக் குற்றமாகக் கொள்ளப்பட்டது. மிக அரிதான நிகழ்ச்சிகளில் தவிர, விலங்குகளின் இறைச்சியைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டிருந்தது.

சிறுசிறு மரபுக் குழுவினர் சமயச் சார்புடைய ஒருவகை ஒப்பந்தங்களை காளை, முயல், சிங்கம், பாம்பு, கழுகு, தேள் போன்ற பிராணிகளுடன் செய்துகொண்டார்கள். ஓநாயைத் தேர்ந்தெடுத்த மரபுக் குழுவினர் அதனைத் தங்கள் குலச் சின்னமாக அமைத்துக் கொண்டனர் ஓநாய் அவர்களின் சகோதரனாகிய·து: அதன் பெயர் அவர்களது குலப் பெயராகியது; அதுவே அவர்களின் சின்னமாகியது; அவர்களின் மூதாதையுமாகியது; அவர்களின் வழிகாட்டியாகவும், பாதுகாவலனாகவும் ஆகியது. அது அவர்களைத் தாக்காது என அவர்கள் கருதினார்கள். அதனைக் கொல்வதும் உண்பதும் அவர்களின் குலத்தில் தடை செய்யப்பட்டது. குலஉறுப்பினர்கள் அனைவரும் அதனைப் போற்ற வேண்டும் என விதிக்கப்பட்டது. இந்த அடிப்படை ஒப்பந்தத்திலிருந்து ''உயிர்க்கொலை கூடாது'' என்ற ஆணை விதி பிறந்தது. மனிதரை மட்டுமின்றி, 'சகோதர' ஓநாய்களைக் கொல்வதற்கும் இந்த விதி பொருந்தும். இந்த விதியை 'ஓநாய்க் குலத்தினர் இன்றும் கடைப்பிடித்து வருகின்றனர்.

மனிதன் இயற்கையுடன் செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தைக் கைவிட்டு, புதிய தெய்வங்களின் மீது நம்பிக்கை கொள்ளத் தொடங்கியதும் குலமரபுச் சின்ன முறை முனைப்புக் குன்றிப் புராண மரபாக மாறியது என்பர். ஆனால், பல நேர்வுகளில், மனிதன் தனது குலச்சின்னப் பிராணியை தனது தெய்வங்களுக்குக் கூட்டாளியாக வழங்கினான். சிலர் அந்த விலங்கினைத் தெய்வமாக ஆக்கினர். பண்டைய எகிப்தில் இன்று அசியூட் எனப்படும் லைகோபோலைட் நாட்டின் தலைநகராகிய லைகோபோலிசில் (ஓநாய் நகரம்) ஓநாய் தெய்வமாக வணங்கப்பட்டது. பண்டைய கிரீசில். பகலுக்கும் ஒளிக்கும் தெய்வமான அப்போலோ, ஓர் ஓநாய்க் கடவுளாகப் போற்றப்பட்டது டெல்ஃபி கோயிலில் ஒரு வெண்கல ஓநாய் தனது பலிபீடத்தைக் காவல் காப்பதைக் காணலாம்.

ரோமானியரின் போர்த் தெய்வமாகிய மார்ஸ்-ஏரிஸ் தனது சின்னமாக, ஓர் ஓநாயைக்கொண்டிருந்தது. சில சமயம் அத்தெய்வம் ஓநாய்த் தோல் போர்த்தி ஓநாயாகவே மாறியது அது. 'ரியாசில்வியா' என்ற கன்னித் தெய்வத்தைக் கற்புநெறி பிறழச் செய்தது. அந்தப் பாவத்திற்காக அந்தக் கன்னித்தெய்வம் நீரில் மூழ்கடித்துக் கொல்லப்பட்டது. அவளுக்குப் பிறந்த ரோமுலஸ், ரேமஸ் என்ற குழந்தைகளும், பாலட்டின் மலை அருகில் சதுப்புநில நீரில் சிக்கி இறக்கும்தறுவாயிலிருந்தபோது, ஒரு பெண் ஓநாய் அவ்விரு குழந்தைகளையும் காப்பாற்றி வளர்த்தது பின்னர், ரோமுலஸ் தனது சகோதரனைக் கொன்றுவிட்டு, ஓநாய் தங்களை வளர்த்த மலையின்மீது ஒருநகரை நிறுவினான் அந்த நகரம் ரோமுலசின் பெயரால் 'ரோம்' எனப் பெயர் பெற்றது. அதுமுதற்கொண்டு ரோம் நகரம், ஓநாயைத் தனது குலச்சின்னமாகக் கொண்டது. அதன் கொடியிலும் ஓநாய் இடம் பெற்றது ரோமானிய உலகு நெடுகிலும் ஓநாய்க் கொடியே பறந்தது அதற்கு வடக்கே, 'ஓடின்' என்ற ஓநாய்த் தெய்வம் கோலோச்சியது. அதற்கு ஜெரி, ஃபிரீக்கி என்ற இரு ஓநாய்கள் இணைபிரியாமல் இருந்து துணை புரிந்தன. இந்தப் புராணக்கதைகள் ஓநாயை மக்கள் மிகவும் மதித்துப் போற்றியதாகக் கூறுவது இயற்கையே. ஏனெனில், ஓநாய் மனிதனுக்குச் சகோதரனாகவும், சில சமயம் அவனது காப்பாளனாகவும் இருந்துவந்திருக்கிறது

அதேசமயம் கிறித்தவ சமயத்துறவிகளும் காட்டு விலங்குகளுக்கு அஞ்சாமல் அவற்றின் மத்தியில் வாழ்ந்தார்கள். ஓநாயை நேசித்த துறவிகள்



படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம்: ஜே.எம். சார்ல்ஸ் © ராஃபோ, பாரிஸ்

*ஸ்டட்கார்ட் விலங்குகாட்சி சாலையில் முன்னால் பணியாற்றிய வெர்னர் ஃப்ரேண்ட் எனும் ''ஓநாய் மனிதர்'' ஜெர்மானிய கூட்டாட்சிக் குடியரசில் சார் காட்டிலுள்ள மெர்சிகில் 20 ஓநாய்களை ஒரு தனியிடத்தில் வளர்த்துவருகிறார். அவற்றுடன் வாழ்ந்து, விளையாடி, உண்டு, உறங்கியும் வருகிறார்.*

*பல நூற்றாண்டுகளாக ஓநாய் இடைவிடாது கொல்லப்பட்டுவருகின்றது. அதனால் அதன் முன்னாள் உறைவிடங்களிலிருந்து, குறிப்பாக மேற்கு ஐரோப்பாவிலிருந்து, ஏறக்குறைய மறைந்துவிட்டது. ஆங்காங்கே ஒருசில மட்டும் வாழ்ந்து வருகின்றன. கீழே; ஐரோப்பிய ஓநாய் குட்டி.*



ஒளிப்படம்: ரே டெர்காஸ்ப்ஸ் © ஜக்கானா, பாரிஸ்

பலர். புனித பீட்டர் ஓநாய் மேய்ப்பவராக இருந்தவர் என ஸ்லாவியர் நம்பினர். ஒவ்வொரு ஜனவரி 17 அன்றும் அவர் ஓநாய்களை ஒருங்கு கூட்டி, அந்த ஆண்டுக்குரிய உணவினை அவற்றுக்கு வழங்கினார் என்பர். கிழக்கு ஐரோப்பாவில், வன விலங்குகளின் புரவலனாக விளங்கிய புனித ஜார்ஜ், ஓநாய்கள் புடைசூழ இருந்தார். ஹெர்வே என்ற பார்வையற்ற புனிதர் தனக்கு வழிகாட்டியாக ஓர் ஓநாயைக் கொண்டிருந்தார். அசிசிப் புனிதர் ஃபிரான்சிஸ், குப்பியோ என்ற ஓநாயுடன் நட்பு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தார். அந்த ஒப்பந்தத்தை மதித்துச் சீர்திருந்திய அந்த ஓநாய்க்கு அதன் ஆயுள் முழுவதும் மக்களே உணவு வழங்கிவந்தனர்.

பிறகு, திடீரென எல்லாம் மாறியது. ஒரு தெய்வமாக அல்லது தெய்வத்தின் தோழனாக, துறவிகளின் நண்பனாகப் போற்றப்பட்டு வந்த ஓநாய் படிப்படியாக மனிதனின் பகைவனாக—சாத்தானின் கையாளாக—நரகத்தின் தூதுவனாக—கொல்லப்படவேண்டிய பிராணியாகக் கருதப்படலாயிற்று. ஓநாய் இன்று, தேவதைக் கதைகளிலும், வேடிக்கைத் துணுக்குகளிலும், விளம்பரங்களிலும், திரைப்படங்களிலும் மட்டுமே காணப்பட்ட போதிலும், அதைப் பற்றிய வெறுப்புணர்வு நம் அடிமனதில் இன்னும் புகைந்து கொண்டிருக்கிறது.

இதற்கான காரணத்தை ஓரளவுக் குப் புரிந்துகொள்ள முயல்வோம். வரலாற்றுக்கு முந்தியகால மனிதன் தான் வாழ்ந்த குகைகளின் சுவர்களில் பல விலங்குகளின் உருவங்களை மிகத் துல்லியமாக வரைந்துள்ளான். அந்தக் காலத்தில் ஓநாய்கள் இருந்திருக்கின்றன. ஓநாய்களின் எலும்புக் கூடுகளும் கிடைத்துள்ளன. ஓநாய் எலும்புகளாலான அணிகலன்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவே அக்காலத்து மனிதன் ஓநாய்களுக்கு அஞ்சாமல், அவற்றுடன் சக வாழ்வு நடத்தியிருக்கவேண்டும். எனினும், அவர்கள் வரைந்த குகை ஓவியங்களில் ஓநாய் உருவங்கள் காணப்படவில்லை

பின்னர் மனிதன் கால்நடை வளர்க்கலானான்; வேளாண்மையை செய்யலானான். ஓநாய்கள் கால்நடைகளுக்கு ஆபத்தாயின. மனிதன் காடு திருத்தி, நாடுகள் அமைத்த போது, ஓநாய்கள் குறுகிய காடுகளுக்குள் விரட்டப்பட்டன. ஓநாய்கள் உணவுக்காக மனிதன் வளர்த்த கால்நடைகளைத் தாக்கி வேட்டையாடலாயின. இதனால், ஓநாயை மனிதன் பகைவனாகக் கருதி அதனை ஒழித்துக்கட்ட முனைந்தான். அதனால், ஓநாய் தன்னை ஒழிக்க முயன்ற மனிதனையும் தாக்கலாயிற்று. மனிதன்—ஓநாய் பகைமை மேலும் வளர்ந்தது. போர்களும், படையெடுப்புகளும், பஞ்சங்களும் இந்தப் பகையை அதிகமாக்கின.

அதன்பின்பு, இவ்விரு எதிரிகளும் கடும்போரில் ஈடுபட்டனர். மனிதன் ஓநாய்களை ஒழிக்க எல்லா உத்திகளையும் கையாண்டான். அவற்றைக் கண்ணிவைத்துப் பிடித்தான்; நஞ்சிட்டுக் கொன்றான்; அவற்றைக் கொல்ல எல்லாவகை ஆயுதங்களையும் பயன்படுத்தினான். தனது பொருளாதாரத்திற்கு ஓநாய் பெரிதும் தீங்குசெய்வதால், அதனை அடியோடு ஒழித்துக்கட்ட மனிதன் தீர்மானித்தான். உயிரினச் சூழலில் ஓநாயின் முக்கியத்துவத்தையோ, ஓநாயின் பல உறுப்புகள் முக்கிய மருந்துப் பொருள்களாகப் பயன்படுவதையோ மனிதன் பொருட்படுத்தவில்லை.

(தொடர்ச்சி IV பக்கம் பார்க்க)

---

**தானியல் துப்வா** ஃபிரெஞ்சு விலங்கின இயலார். பாரிஸிலுள்ள இயற்கைவள அருங்காட்சியகத்தில் இனஉயிரியல், மற்றும் உயிர்ப் புவியியல் ஆய்வகத்தில் அலுவலர். தானியல் பெர்ணார்துடன் சேர்ந்து ''லோம் எத் லெ லூ'' (2ஆம் பதிப்பு, 1987) எனும் நூல் எழுதியுள்ளார்; பல இதழ்களில் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். மக்களும் மரங்களும் பற்றி இப்போது நூல் எழுதி வருகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

**மறைந்துவரும் இனங்களை அவற்றின் இயற்கை உறைவிடங்களில் பிழைத்துவாழத் துணைசெய்தல்.**



ஒளிப்படம்: ஜி.பி. ஸ்காலர் © டபிள்யூ, டபிள்யூ, எஃப், கிளாண்டு, சுவிட்ஸர்லாந்து

# பெரிய 'பண்டா' கரடியின் இறுதிப் புகலிடம்

பான் வென்ஷி

கருப்பு வெள்ளை மென்மயிரும், அருவருப்பான நடத்தையும் கொண்ட இராட்சதச் செங்கரடிகள், இன்று சீனாவுக்கு மட்டுமின்றி உலகம் முழுவதற்குமே ஒரு கருவூலம். அவை இன்று அற்றுப்போகும் அபாயத்தில் உள்ளன. அவற்றின் அவல நிலை எல்லோருக்கும் கவலையளிக்கிறது

சீனாவிலும், கிழக்குப் பர்மாவிலும், வடக்கு வியட்னாவிலும் நூற்றுக்கணக்கான இடங்களில் கிடைத்துள்ள புதைபடிவங்களை அறிவியல் முறையில் ஆராய்ந்த பிறகு, இந்தச் செங்கரடிகளின் பரிணாமம் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. மனிதக் குரங்கிலிருந்து, மனிதன் தோன்றுவதற்கு 30 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே இராட்சதச் செங்கரடிகள் இருந்து வந்தன. அப்போது, இராட்சத மனிதக் குரங்குகள் ஆதிக்கம் செலுத்தி வந்த இன்றையத் தென்சீன வெப்பமண்டலக் காடுகளில் இராட்சதச் செங்கரடிகள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே இருந்தன. அந்தக் காலத்திய இராட்சதச் செங்கரடிகளின் புதைபடிவப் பற்களிலிருந்து, அவற்றின் உணவு இன்றுள்ளதைப் போலவே இருந்துள்ளது என்பதும், ஆனால் அவற்றின் வடிவளவு மட்டும் இன்று நன்கு வளர்ந்த ஒரு செங்கரடியின் வடிவளவில் பாதிதான் இருந்தது என்பதும் தெரிய வருகிறது.

இந்த இராட்சதச் செங்கரடிகள் 7,50,000 ஆண்டுகளுக்கு முன்பு, சீனாவின் குவின்லிங் மலைப் பகுதிகளுக்குப் பரவி, தெற்கில் முத்து ஆறு யாங்சே ஆறு ஆகியவற்றின் வடிநிலப் பகுதிகளிலிருந்து வடக்கில் சூக்குட்டியான் பகுதி வரையிலும் பரவியிருந்தன. இந்தக்கால அளவின்போதுதான் இராட்சதச் செங்கரடிகளின் எண்ணிக்கை உச்ச அளவை எட்டியிருந்தது. அவை வடிவளவிலும் பெருத்து, இன்றுள்ளதைவிட, $\frac{1}{8}$ பகுதி பருமனாக இருந்தன. தொடக்கத்தில் தென்பகுதியிலிருந்து வெப்பமண்டலக் காடுகளில் இவை மிகுதியாக வாழ்ந்ததுடன், வடபகுதிக் காடுகளின் மிதமான குளிர் வெப்ப நிலையில் வாழவும் கற்றுக் கொண்டன.

முதலாவது பனிக்கட்டியுகம் 18,000 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியபோது இராட்சதச் செங்கரடிகளுக்கு முதலாவது அபாயம் தோன்றியது. அப்போது குவின்லிங் மலைகளுக்கு வடக்கில் செங்கரடிகளின் ஆதிக்கப் பகுதி அடியோடு அழிந்துபோயின; தெற்கிலும் அவற்றின் எண்ணிக்கை சுருங்கியது. இதற்கு உண்மையில் இயற்கை காரணமன்று; மாறாக, மனிதர்களே காரணம்.

கடந்த 12 நூற்றாண்டுகளில் மிக விரைவாகப் பெருகி வந்த மனித இனம், தெற்குச் சீனாவில் செழிப்பான மலையடிவாரங்களிலிருந்து, இராட்சதச் செங்கரடிகளை குவிங்காய்-திபேத் பீடபூமியின் கிழக்கிலுள்ள பள்ளத்தாக்குகளுக்கு விரட்டியது. இன்று சீனாவுக்கு மேற்கிலுள்ள மலைப் பகுதிகள் ஆறு தனித்தனி இடங்களில் மட்டுமே இந்தச் செங்கரடிகள் காணப்படுகின்றன. இதில் ஒன்று குவின்லிங் மலையின் தெற்குச் சரிவில் 1650 சதுர கி.மீ. பரப்பில் அமைந்துள்ளது. இதில் 240 இராட்சதச் செங்கரடிகள் மட்டுமே வாழ்கின்றன, இந்த ஆறு இடங்களில் மிகப்பெரியது மின்ஷான் மலைச் சரிவில் 13,000 ச.கி.மீ. பரப்பில் உள்ளது. இதில் 350 செங்கரடிகள் உள்ளன. சிக்குவான் மாகாணத்தில் குவியாங்லாய் மலைகளால் சூழப்பட்டுள்ள புகழ்பெற்ற ஒலாங் இயற்கைக் காப்பிடத்தில் 10,425 ச.கி.மீ. பரப்பில் 250 செங்கரடிகள் வாழ்கின்றன தெற்கில் மூன்று மலைத் தொடர்களில் 3,300ச.கி.மீ. பரப்பில் 100 செங்கரடிகள் உள்ளன. மொத்தத்தில், 28,725 ச.கி.மீ. பரப்பில் ஆயிரத்திற்கும் குறைவான இராட்சதச் செங்கரடிகள் வாழ்கின்றன.


இராட்சதச் செங்கரடிகளால் இதுகாறும் எவ்வாறு உயிர்வாழ முடிந்தது? குவின்லிங் மலைகளில்

*ஓராயிரம் பெரிய 'பண்டா' கரடிகளே இன்று உயிர் வாழ்ந்துவருகின்றன. அவை எல்லாம் மேற்கு சீனாவில் உயர் மூங்கில் காடுகளில் 6 சிறு பகுதிகளில் வாழ்கின்றன. அவை பெரும்பாலும் மூங்கில் உணவையே உண்கின்றன.*



படிப்பகம்

www.padippakam.com





ஒளிப்படங்கள்: ஜி.பி. ஸ்காலர் © டபிள்யூ. டபிள்யூ. எஃப்; கிளாண்டு, சுவிட்ஸர்லாந்து

சீன வன அமைச்சகமும் உலக வன விலங்கு நிதியும் நிறுவிய வோலோங் இயற்கைப் புகலிடத்திலுள்ள (சிச்சுவான் மாநிலம்) 'பண்டா' ஆய்வு நிலையத்திற்கு கொண்டு வரப்பட்ட சென்-சென் ("விலைமதிப்பற்ற" அல்லது "அரிய கருவூலம்") எனும் இப்பெண் பண்டாவிடம் அச்சத்தின் அடையாளமே தெரியவில்லை.

வாழும் இந்தச் செங்கரடிகளின் இயற்கை வரலாற்றை ஆராய்ந்த பெய்ஜிங் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கீழ்க்கண்ட முடிவுக்கு வந்துள்ளார்கள்:

கடந்த பல்லாயிரம் ஆண்டுகளில் மனிதருடன் நடத்திய கடுமையான சகவாழ்வின்போது, இந்தச் செங்கரடிகள், மனித நாகரிகம் ஏற்படுத்திய சுற்றுப்புறச்சூழல் மாற்றங்களுக்குத் தாக்குப்பிடித்து வாழும் திறனைப் பெற்றன. ஆனால், இந்த மாற்றங்கள் மிகத் துரிதமாகவும், உள்ளியல்பாகவும் நடைபெற்றமையால், அந்த வேகத்தை எட்டமுடியாமல் அவை பெரும் எண்ணிக்கையில் குறைந்துபோயின. ஆயினும், கடந்த 2000 ஆண்டுகளாக மலைச் சரிவுகளைச் சாகுபடிக்குப் பண்படுத்த மனிதர் மேற்கொண்ட முயற்சிகள் உயர்ந்த மலைகளின் கடுமையான வெப்பநிலை காரணமாக வெற்றியடையாமல் போகவே, அந்த மலைக் காடுகளை அழிப்பதை மனிதர் குறைத்துக்கொண்டார்கள். அவ்வாறு தப்பிய உயர்ந்த மலைக்காடுகள் இராட்சதச் செங்கரடிகளின் வாழிடங்களாயின. இவ்வாறுதான் குவின்லிங்க மலையின் தென்சரிவில் 1400 மீட்டருக்கு மேற்பட்ட உயரத்தில் செங்கரடிகள் உயிர்வாழ்கின்றன.

ஆனால், கோடிக்கணக்கான மக்களின் தேவைகளுக்காக இந்த மலைக் காடுகளிலுள்ள மரங்கள் கண்டபடி வெட்டி வீழ்த்தப்படுவதால், இராட்சதச் செங்கரடிகளின் இயற்கை வாழிடம் பறிபோகிறது. இன்று சீனாவின் இராட்சதச் செங்கரடிகள் அற்றுப் போகும் அபாயத்தில் உள்ளன. காடுகள் சுருங்கிவருவதும், இவற்றின் இனப்பெருக்கம் குறைவாக இருப்பதும், இவற்றின் முக்கிய உணவாகிய மூங்கில் குறைந்து இவை பட்டினியால் சாவதும், இந்த அபாயத்திற்குக் காரணம்.

இனிமேல் இராட்சத செங்கரடிகளை வாழ்விப்பது இயற்கையின் கையில் இல்லை; மனிதர் கையில் தான் இருக்கிறது. இன்று உலகில் சீனாவில் மட்டுமே இராட்சதச் செங்கரடிகள் வாழ்கின்றன. எனவே, இவற்றைப் பாதுகாப்பதற்குச் சீன அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இவற்றைச் சட்டப்படி பாதுகாக்கவும், இவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை மக்கள் உணரச் செய்யவும் சீன அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இவை வாழும் பகுதிகளில் 20% பரப்பு இயற்கைக் காப்பிடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. சீன வனத்துறை அமைச்சகமும், உலக வனவிலங்கு நிதி நிறுவனமும் இணைந்து 1980இல் இராட்சதச் செங்கரடி ஆய்வு மையம் ஒன்றை நிறுவியுள்ளன இது சிச்சுவானிலுள்ள ஒலாங் இயற்கைக் காப்பிடத்தில் அமைந்துள்ளது. இது இச்செங்கரடிகளின் வாழ்க்கை குறித்து ஆராய்ந்து வருவதுடன், இவற்றை இவற்றின் இயற்கை வாழிடங்களில் பாதுகாப்பதற்கான வழிமுறைகளையும் வகுத்து வருகிறது.

பெய்ஜிங் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் 1980இல் குவின்லிங் இயற்கைக் காப்பிடத்தை விரிவாக ஆராய்ந்து, இராட்சதச் செங்கரடிகள் வசதியான சுற்றுப்புறச் சூழலில் வாழ்வதற்கு ஏற்ற வனச் சமுதாயத்தை ஏற்படுத்தி, அதேசமயம் மனிதச் சமுதாயத்திற்கு அதிக வெட்டு மரம் கிடைக்கச் செய்வதற்கான வழிவகையைக் கண்டறிவதில் ஈடுபட்டுள்ளார்கள். இந்த முயற்சி, மனிதனும் இராட்சதச் செங்கரடியும் பகைமை நீங்கி, இணக்கமான சகவாழ்வு நடத்த வழி வகுக்கும் என அவர்கள் நம்புகிறார்கள்

தமிழில்: இரா. நடராசன்

---

**பான் வென்ஷி** சீன மக்கள் குடியரசைச் சேர்ந்தவர்; பெய்ஜிங் பல்கலைக்கழக ஆசிரியர்; கின்லிங் மலைகளில் வாழும் பெரிய பண்டாக்களின் இயற்கை உறைவிடங்கள்பற்றி வரவிருக்கும் நூல் உட்பட, பெரிய பண்டாபற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளார்.




படிப்பகம்

www.padippakam.com

# குரங்கும் சிறுத்தையும்

ஓர் ஆஃப்ரிக்கப் பழங்கதை

ஆஃப்ரிக்கா பழமொழிகளும் பழங் கதைகளும் மலிந்த ஒரு சுரங்கம். அவை கிராமக் கூட்டங்களில் வாய் மொழியாகத் தலைமுறை தலைமுறை யாக வழங்கப்பட்டுவருகின்றன. பல கதைகள் விலங்குகள் பற்றியவை, இவை நகைச்சுவையுடன் ஒரு செய்தி யை உரம்படக் கூறுகின்றன. காம ரூன் நாட்டு வாய்மொழி மரபு வல்லு நரான கேப்ரியல் எலூனா எம்ஃபோ மோ கூறுவதுபோல், "பழங்கதைத் தொகுதிகள் முன்னோர்களால் வருங் காலத் தலைமுறைகளுக்கு வழங்கப் பெற்ற 'எழுதா விவிலியம்." கேப் ரியல் எலூனா எம்ஃபோமோ தொகுத்து ஃபிரெஞ்சில் மொழியில் பெயர்த்த காமரூனியக் கதைத் தொகுப்பான "ஸ்வாரே ஒ விலாஷ்" ("வில்லேஜ் ஈவ்னிங்ஸ்" கார்த்தாலா பதிப்பகம், பாரிஸ், 1980) எனும் நூலிலிருந்து இக்கதை எடுக்கப்பட் டுள்ளது.



ஒளிப்படம்: ஏ.பி.ஒய். © ஜக்கானா, பாரிஸ்

ஒருநாள் சிறுத்தை வேட்டைக்குப் புறப்பட்டது. அது மிகவும் பசியாக இருந்தது. ஏனெனில் அது பல இரவு களாகப் போதிய உணவு உண்ண வில்லை. காட்டின் வழியே அது மெதுவாக நடந்தது. அதன் கண்கள் ஒளிரின; வால் மடங்கியிருந்தது; நாக்கு தொங்கிக் கொண்டிருந்தது. திடீரென அது காய்ந்த இலைகளால் கவனமாக மூடப்பட்டிருந்த குழி யினுள் விழுந்தது. அக்குழி பொறி யாகப் பயன்பட்டது. திகைப்புற்ற அதற்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை கத்தினால், விரைவில் வேடன் வந்து, அதை எடுத்துக் கொண்டு போய் விற்றுவிடுவான். ஆகவே அது குழியின் அடியில் எல்லா புறங்களிலும் குதித்துப் பார்த்தது. ஆனால் வெளியேற வழியில்லை

மூச்சுத் திணறிய நிலையில் அது ஊளையிட்டது. "உதவிக்காக ஊளையிட எனக்குக் குரலிருக்கும் போது நான் ஏன் அமைதியாக இறக்கவேண்டும்? ஒருவேளை ஒரு சகோதர விலங்கு என் குரல் கேட்டு எனக்கு உதவ வரக்கூடும்" என்று எண்ணியது. அதற்கு மாறாக குழி யின் அடியில் சிறுத்தையைப் பார்த்த வுடன் விலங்குகள் ஓடின. "சிறுத்தை யா? அதனருகில் சென்றால் உயிருக்கு ஆபத்தல்லவா? அதுவே தப்பித்துக் கொள்ளட்டும். நமக்கும் பிரச்சினை கள் உண்டு" என்று அவை எண் ணின

விலங்குகள் அப்பொறியைவிட்டு விலகி வரிசையாகச் சென்றன. சிறுத்தை அக்குழியிலே கிடந்தது.

இதற்கிடையில் அகம்கோ எனும் வெண்மூக்குடைய குரங்கு ஒரு குடை மரத்தின் கிளையில் அமர்ந்து, பழத் தை உண்டுகொண்டு முகத்தைச் சுளித்துக் கொண்டிருந்தது. அதற்கு சிறுத்தையின் அழுகைக் குரல் கேட் டது. அது குனிந்து கீழேயுள்ள புதரை உற்றுப் பார்த்தது. நிலத்தின் அடியிலிருந்து வருவதுபோன்று கேட்ட அக்குரல் யாருடையதென்று அதற்குத் தெரியவில்லை. ஆகவே அக்குரங்கு நிமிர்ந்து, குதித்து, கீழே யுள்ள புதரில் இறங்கியது. கவன மாகக் கேட்டபோது, குழியிலிருந்து முனகல் வருவது தெரிந்தது.

"என்ன இது? யார் புலம்புவது?" என்று அது வருந்தியது.

தரையில் குதித்தபோது, தலை முதல் வால் வரை மண்மூடிய ஒரு சிறுத்தை குழியினடியில் புலம்பிக் கொண்டிருந்ததைக் கண்டது.

"சிறுத்தையே, சகோதரனே, அங்கு என்ன செய்கிறாய்?" என்று குரங்கு கேட்டது.

அதற்கு குரங்கு கூறியது:

"குரங்கே, சகோதரனே, உறவின் பெயரால் உன்னைக் கேட்கிறேன். என்னைக் காப்பாற்று, நான் சாகப் போகிறேன். பொறியை அமைத்தவ னுக்கு அஞ்சுகிறேன். அவன் என் னைக் கண்டுவிட்டால், என் கதி அவ்வளவுதான். குரங்கே, சகோ தரனே, எனக்கு இரங்கி, இக்குழியி லிருந்து என்னை வெளியேற்று".

அகம்கோ கொஞ்ச நேரம் சிந்தித் தது. அதற்கு சிறுத்தையின் குணம் தெரியும். ஆகவே தனது ஐயத்தைத் தீர்க்க விரும்பியது.

"உன்னை வெளியேற்றினால், என் னைப் பிடித்து விடுவாயா?"

சிறுத்தை ஆணையிட்டு உறுதி கூறியது

"ஒருபோதுமில்லை யாராவது அவ்வாறு நினைப்பார்களா;

குரங்கு பதில் கூறியது:

"இதை உறுதிசெய்து கொள்ள வேண்டும்; முதலில் எனக்கு உறுதி மொழி கொடு"

சிறுத்தை உறுதியளித்தது:

"என் முன்னோர் பெயரால் ஆணையிடுகிறேன். சகோதரனே, அஞ்சாதே என்னைக் காப்பாற்று".

ஐயம் தீராததால், வெண்மூக்கு டைய குரங்கு இன்னும் உறுதிபெற விரும்பியது:

"சிறுத்தையே, உனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதால் இவ் வாறு சொல்கிறாயா? உண்மையாக வே சொல்கிறாயா? உன் குணம் எல்லா விலங்குகளுக்கும் தெரியும் எந்த விலங்கையாவது நீ கொல்லா மல் விட்டிருக்கிறாயா?"

சிறுத்தை தனது வழிகளைத் திருத் திக் கொள்வதாகத் திரும்பத் திரும்ப ஆணையிட்டது. அகம்கோ பரம் பரை அறிவுரையை நினைப்பூட்டி யது:


"'சாவு எளிதில் வரக்கூடியது. மேலும், எளிதில் நோயைக் குண மாக்கலாம்; ஆனால் ஒருவரது குணத்தை மாற்ற இயலாது; ஏனெ னில் குணம் ஒருவருக்கு இயல்பானது என்று நம் முன்னோர் கூறினர்".

சிறுத்தை கண்ணீர் சிந்திக் கெஞ்சி



படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம்: வெர்சியர் © ஜக்கானா, பாரிஸ்.

யது:

''வெண்மூக்குடைய குரங்கே, சகோதரனே, என்னை இக்குழியிலிருந்து வெளியேற்றிவிடு. குரங்கினமும் சிறுத்தை இனமும் வாழ்நாள் முழுவதும் ஒற்றுமையாக இருக்குமென உறுதி கூறுகிறேன்.''

குரங்கு இணங்கியது.

''சிறுத்தையே, வாக்குறுதி அளித்துவிட்டாய் பார்க்கலாம்.'

குரங்கு ஒரு நீண்ட கம்பை வெட்டி குழியின் குறுக்கே வைத்தது. பிறகு அதன்மேல் அமர்ந்து, தன் வாலைச் சிறுத்தை பிடிக்கக்கூடிய வகையில் தொங்கவிட்டது. சிறுத்தை உடனே அதைப் பிடித்து, குழியைவிட்டு வெளியேறியது. குரங்கு இன்னும் விரைவாக மூச்சுவிட்டுக் கொண்டிருந்தது. சிறுத்தை எவ்வளவு நேரம் குழியிலிருந்ததென அது கேட்க எண்ணியபோது, சிறுத்தையின் போக்கில் திடீரென ஒரு மாற்றம் ஏற்பட்டது. அதை விழுங்குவதுபோல் சிறுத்தை பார்த்தது. குரங்கு உள்ளம் நடுங்கி, உடலெல்லாம் நடுங்கியது; அஞ்சி, நா குளறிக் கேட்டது:

''சிறுத்தையே ஏன் என்னை இப்படி பார்க்கிறாய்? சினத்தை உன்னால் அடக்கவே முடியாதா?''

விடுதலையடைந்த சிறுத்தை கீழ்கண்டவாறு கூறியது:

''வெண்மூக்குடைய குரங்கே, ஒருவரது இன்பம் மற்றவரது துன்பம் எனத் தெரியாதா? விரும்பி விற்கப்படும் குதிரை மிகுதியாகத் துன்புறும் எனவும், அதன் மேல் மக்கள் சவாரி செய்து அதை அடிப்பார்கள் எனவும் தெரியாதா? நீ என்னைக் குழியிலிருந்து வெளியேற்றினாய் என்பது உண்மைதான். ஆனால் நீ இப்போது என் முன்னால் இருக்கும்போது, நான் பட்டினியால் சாக வேண்டுமென நினைக்கிறாயா? எனக்கு உதவ நீ முடிவுசெய்ததால, நான் இப்போது உன்னைத் தின்னப்போகிறேன்''

அகம்கோ தனக்கு முன்னால் ஒளிரும் கண்களுடனும், நீண்ட நாக்குடனும், தாழ்ந்த வாலுடனும், அச்சுறுத்தும் பற்களுடனும், எஃகு நகங்களுடனும் நிற்கும் ஒரு கொடிய வன விலங்கைக் கண்டது 'சிறுத்தை என்னை விழுங்க முடிவுசெய்துவிட்டது'' என்று அச்சிறு கூத்தாடிக் குரங்கு சிந்தித்தது தப்புவதற்கு ஏதாவது வழியுண்டா என்று அது நினைத்துக் கொண்டிருந்தபோது, சிறுத்தை அதன் சிந்தனையைத் திடீரெனக் கலைத்தது.

'வெண்மூக்குடைய குரங்கே, இரக்கமுள்ளவர்கள் வெற்றி பெறுவதில்லை எனக் கேள்விப்பட்டதில்லையா?''

குரங்கு காலங்கடத்துவதற்காகச் சிறுத்தையுடன் பேசிக் கொண்டிருக்க முயன்றது. அப்போது விலங்குகள் வரிசையாக அக்குழியைச் சுற்றி வீடு திரும்பிக் கொண்டிருந்தன தான் தப்பிவிடுவதாக குரங்கு நினைத்தது. ஆகவே ஒவ்வொரு விலங்கிடமும் தனக்கும் சிறுத்தைக்குள்ள தகராறு பற்றி விளக்கி, தனக்கு நீதி கிடைக்குமென்று நினைத்தது. ஆனால் அவை சிறுத்தைக்கு அஞ்சின. எல்லாவற்றிற்காக ஒன்று மடிவது மேல் என்று அவை கருதின; ஒரே மனதாக அவை குரங்கிற்கு எதிராகத் தீர்ப்பளித்தன. சிறுத்தைக்குப் பலியாகுமாறு அதை வற்புறுத்தின. சிறுத்தை பொறுமை இழந்து, பேச்சை நிறுத்த விரும்பியது ''நீண்ட பேச்சு வறுமையின் அடையாளம்'' எனும் முன்னோரின் முதுரையை அது எடுத்துரைத்தது.

குரங்கின் மீது அது பாயத் தயாரானபோது, திடீரென கனமான ஓடுடைய ஓர் ஆமை அங்கு வந்தது. எதிராளிகள் அதை 'இறுதித் தீர்ப்பளிக்குமாறு கேட்டன

குரங்கு பேசத் தொடங்கியது.

''ஆமையே, சகோதரனே, இன்று நம்பத்தகாதது ஒன்று நடந்துவிட்டது. நீ இங்கு பார்க்கும் குழியிலிருந்து இச்சிறுத்தையைக் காப்பாற்றினேன் எனக்குத் தீங்கு செய்வதில்லையென்று அது வாக்களித்தது ஆனால் நான் அதைக் காப்பாற்றிய உடனே என்னை அது ஒரு பாதுகாப்பற்ற இரையாகவே கருதியது நீயாவது ஒரு திட்டமான தீர்ப்பளி நான் செய்தது தவறெனில் சிறுத்தை என்னைத் தின்னட்டும்''.

ஆமை வியப்புடன் கைதட்டியது.

''குழியிலிருந்து சிறுத்தையை வெளியேற்றினாய் என்றா சொல்கிறாய்! முடியாது. உனக்கு அத்துணை வலிமை ஏது?' என்று ஆமை கேட்டது.

(தொடர்ச்சி IV பக்கம் பார்க்க)

பதிப்புரிமை © கார்த்தாலா பதிப்பகம், பாரிஸ்



படிப்பகம்

www.padippakam.com

# இஸ்லாத்தில் விலங்குகள்

அப்துல் ஹமீது எஸ். ஹம்தான



வரைபடம்: பீட்டர் பிட்ஜ்வாட்டர் © தேம்ஸ் அண்ட் ஹட்சன், லண்டன்

பாரசீக (சூஃபி) மெய்ஞ்ஞானியான ஃபரீத் அதின் அத்தார் (1220) எழுதிய "தி கான்ஃபரன்ஸ் ஆஃப் பர்ட்ஸ்" எனும் உருவகக் கவிதையில் வரும் கற்பனைப் பறவை 'சிமுர்க்'. இக்கவிதையின் 15 ஆம் நூற்றாண்டுக் கையெழுத்துப்படியிலுள்ள வரைபடம்.

இஸ்லாமிய ஆண்டில் திருக்குர்ஆன் வெளிப்படுத்தப்பெற்ற (உறுதிப் பாட்டு இரவு) "லைலத்துல் கத்ர்" எனப்படும் இரவும், இறைதூதர் நபிகள் நாயகம் முஹம்மது (சல்) அவர்களின் இரவுப் பயணமான விண்ணேற்றமும் நிகழ்ந்த இரவான 'இஸ்ரா வா அல் மிஹ்ராஜ்' இரவும் இரு மிக முக்கிய இரவுகளாகும்.

மெக்காவிலிருந்து ஜெருசலம் சென்ற இந்த வியத்தகு இரவுப் பயணம் எவ்வாறு நிகழ்ந்தது? நபிகள் நாயகம் அத்தூரத்தை அத்துணை விரைவாக எப்படி கடந்தார்கள்? அவ்விரவில் நபிகள் நாயகம் "புராக்" எனப்படும் விலங்கின் மேல் பயணம் செய்ததாகவும், அது "ஒரே பாய்ச்சலில் பார்வையிலிருந்து மறையும்" வியத்தகுவேகத்தில்அவர்களைச் சுமந்து சென்றதாகவும் பல வரலாற்றறிஞர்களும் திருக்குர்ஆன் உரையாசிரியர்களும்கூறுகின்றனர். உரையாசிரியர்கள் இவ்விலங்கை ஒருவகைகுதிரை எனவும், "கோவேறு கழுதைக்கும் கழுதைக்கும் இடைப்பட்ட அளவுள்ள விலங்கு" எனவும் குறிப்பிடுகின்றனர். சிலர் அது வெண்ணிறமாக இருந்தது எனவும், அதன் முதுகும் காதுகளும் நீண்டிருந்தன எனவும் கூறுகின்றனர். இவ்விலங்கு பற்றிய கருத்து பிறகு வளர்ந்து உருவக வடிவம் பெற்றது. பிற்காலத்தில் அதற்கு மனித முகமும் கொடுக்கப்பெற்றது.

விலங்குகள் பற்றி எழுதிய சிறந்த அராபிய எழுத்தாளரான (869இல் இறப்பு) அல்ஜாஹிஸ் தமது "கித்தாப் அல் ஹயவான்" ('புக் ஆஃப் அனிமல்ஸ்') எனும் நூலில் பயிற்சியின்றி கூடுகட்டும் சிலந்தியைப் பற்றி வியந்து எழுதுகிறார். நபிகள் நாயகம் மெக்காவிலிருந்து மெதினாவுக்குச் சென்ற 'ஹிஜ்ரா' பயணத்தின் போது ஒரு பேராபத்திலிருந்து ஒரு சிலந்தி அவர்களைக் காப்பாற்றியது என்பது மரபுவழிச் செய்தியாகும். அவர்கள் தம்முடன் பயணம்செய்த அபூபக்கருடன் ஒரு குகையில் தஞ்சம் புகுந்தார்கள். அவர்களை விரட்டிச் சென்றவர்கள் குகையின் வாயிலில் சிலந்தி வலையைக் கண்டதால்அங்கிருந்து அகன்று சென்றனர். ஏனெனில், சிலந்தி வலையைக் கலைக்காமல் யாரும் குகைக்குள் நுழைந்திருக்க முடியாது. இவ்வாறாக சிலந்தி திருக்குர்ஆனில் இடம்பெற்றுள்ளது. 29ஆம் சூரா (அதிகாரங்கள்) அதன் பெயர் பெற்றுள்ளன.

இஸ்லாமிய மார்க்கத்தின் தொட்டிலான அரேபியாவில் குதிரை, ஒட்டகம், வெள்ளாடு போன்ற வீட்டு விலங்குகள் முஸ்லிம்களின் வாழ்க்கையில் முக்கிய பங்குபெற்றன. மனிதரின் குணங்களும் குறைகளும் அவற்றிற்கும் உண்டு என்று அவர்கள்கருதினர். எடுத்துக்காட்டாக, சேவல் ஈகைக்குணமுள்ளது, பல்லி வஞ்சனையுள்ளது, சிங்கம் வீரமுள்ளது, கொக்கினம் மதிகெட்டது என்றெல்லாம் அவர்கள் நினைத்தனர். மேலும், பல அராபிய, துருக்கிய இனத்தவர் 'ஆசாத்' (சிங்கம்), 'கால்ப்' (நாய்), 'குரேஷ்' (சுறா) போன்ற விலங்குப் பெயர்கள் வைத்திருந்தனர். சில விலங்குகள் தீய ஆவிகளுக்குரிய மாய ஆற்றல்கள் பெற்றிருந்தன எனும் மூடநம்பிக்கையும் மக்களிடையே பரவியிருந்தது. கற்பனைக் கதைகளிலும் புனிதர்களின் அற்புதங்கள் பற்றிய செய்திகளிலும் விலங்குகள் மனித உருவம் பெறுகின்றன. சில விலங்கினங்களுக்குப் புனிதர்கள் பாதுகாவலாக இருக்கின்றனர். அவர்கள் தாம் பாதுகாக்கும் விலங்குகளின் உருவமேற்கின்றனர்.

பல விலங்குகள் மாயவித்தையில் இடம்பெற்றன; இன்னும் இடம் பெற்று வருகின்றன. கனவில் தோன்றும் சில விலங்குகளுக்கு என்ன விளக்கம் தருவது என்பதுபற்றிப் பல அராபிய அறிஞர்கள் விரிவாக எழுதியுள்ளனர். "குல்" (கொரில்லா) போன்ற கற்பனை விலங்குகள் பாலைவனத்திலிருந்ததாகவும் 'ஜின்' (ஆவிகள்) மனிதரை அணுக விரும்பியபோது கொரில்லா உருவம் எடுப்பதாகவும் கருதப்பட்டது.

இஸ்லாமிய காலத்திற்கு முந்திய அரேபியாவில் "ஜின்" கடற்கன்னிகளாகவும், பாலைவனத் தேவதைகளாகவும் இருந்தன அவை மனிதனுக்கு அடங்காத, அவனுக்குப் பகையான இயல்பைக் காட்டின. பெரும்பாலும் அவை பொதுமக்கள் விரும்பிய இலக்கியத்தில், குறிப்பாக "ஆயிரத்தோர் இரவுகளின்" முதல் பாகத்தில் இடம்பெற்றுள்ளன. அவை அக்கதைகளில் மனிதனுக்கு எதிராகச் செயல்படுவதற்காககுரங்கு பூனை, நாய் போன்ற விலங்குகளின் உருவம் எடுத்தன.

"குல்"களைப் பொறுத்தவரையில், இக்கற்பனை விலங்குகள் தம் உருவத்தை மாற்றி மிகக் கவர்ச்சிகரமான வடிவங்களில் தோன்ற முடியுமெனினும், அவற்றின் கழுதைக் குளம்பு

இளவரசர்களுக்கு கல்வி புகட்டுவதற்காக எழுதப்பட்ட இந்திய விலங்குக் கதைத் தொகுப்பின் அராபிய வடிவமான "கலீலா வா திம்னா"வின் கையெழுத்துப் படிவிலுள்ள சித்திரம். இதை முதலில் பித்பாய் எனும் பழங்கால இந்திய ஞானி எழுதியதாகக் கருதப்படுகின்றது. இதில் அரசருக்கும் ஃபன்சா எனும் பறவைக்கும் உரையாடல் நிகழ்கின்றது. அரசர் கூறுகிறார்:'நாங்கள் உன்னை வஞ்சித்துவிட்டோம்; நீ பழிவாங்கிவிட்டாய். ஆகவே இப்போது நாம் சமம். திரும்பி எங்களிடம் வா, அஞ்சாதே" பறவை சொல்கிறது: "ஒரு போதும் திரும்பி வரமாட்டேன்."



படிப்பகம்

www.padippakam.com




ஒளிப்படம்: தேசிய நூலகம், பாரிஸ்.



படிப்பகம்

www.padippakam.com

களிலிருந்து அவற்றை அடையாளம் காண முடிந்தது. வண்ணத்தையும் வடிவத்தையும் மாற்றும் இத்திறமையை அனைவரும் அறிந்திருந்தனர்.

'அங்கா', 'ருக்', 'இமோர்க்' போன்ற பறவைகளும் பிற கற்பனை விலங்குகளாகும். இவை இப்போது இல்லை; ஆயினும் கிராமியக் கதைகளில் உள்ளன. இறந்தெழும் பாலைவனப் பறவை போன்ற 'அங்கா' அதற்கு இரையான இஸ்லாமிய காலத்திற்குமுந்திய அஷாப்-அல்-ராஸ் இனத்தவருடன் தொடர்புடையது. ஹன்சாலா இப்னு சாஃப்வான் நபிகள் அங்காவின் அழிவுச்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்ததாகக் கூறப்படுகின்றது. இஸ்லாமிய காலம் தொடங்கிய பின் 'அங்கா' ஈரானின் கற்பனைக் கதைகளில் இடம்பெறும் ''சிமுர்க்'' ஆனது.

இஸ்லாமிய உலகின் பல பகுதிகளில், குறிப்பாக வட ஆஃப்ரிக்காவில் காணப்படும் கிராமிய இலக்கியத்திலுள்ள விலங்குக் கதைகள் வாய்மொழி மரபில் முக்கிய இடம் பெற்றுள்ளன. பாதி ஓநாயும் பாதி குள்ள நரியுமான ''இபின் அவா'' எனும் நரி அவற்றில் முக்கிய பங்கு பெறுகின்றது.


இஸ்லாமிய அறிவியலார் விலங்கியலை விரும்பியதில்லை. அரிஸ்டாட்டிலின் ''ஹிஸ்டோரியா அனிமாலியம்'' எனும் நூலை 9ஆம் நூற்றாண்டில் யாஹியா இப்னு அல்பித்ரிக் மொழிபெயர்த்தபோதிலும், பல்வேறு அறிவியல் பாகுபாடுகளில் விலங்கியல் இடப்பெறவில்லை; அஃது இயற்பொருள் சார்ந்த இயல்களின் ஒரு பகுதியாக இருந்தது. அல்ஃபராபி அதை ஆன்ம இயலுடன் இணைத்தார். இதற்கு உண்மையான அறிவியல் இயல்புடைய ஆராய்ச்சி இல்லாததே பெரும்பாலும் காரணமாக இருக்கலாம். விலங்குகள் பற்றி அல்-ஜாஹிஸ் எழுதிய மேலே குறிப்பிட்ட பெரிய நூல் சமய நூலாகும்; விலங்கியல் நூலன்று. வாய்மொழி மரபுகளினால் வளம்பெற்ற இலக்கியக் குறிப்புகளே அதில் பெரும்பாலுமுள்ளன. 1405இல் இறந்த அத்-தாமிரி எழுதிய 'ஹயத் அல்-ஹயவான்' (137 ) எனும் நூலும் அது போன்றதே. இந்நூலும் புதிய பாகுபாடு செய்யாமல், அல் ஜாஹிஸ் கூறியதையே திருப்பக் கூறுகின்றது.

இயற்பியலாரும் உயிரின இயலாரும் விலங்குகளில் அக்கறை காட்டினர். ஆனால், அவர்கள் நீர் உயிரின இயல், நீர் உயிரின மருத்துவம், வேட்டைக்கு வல்லூறுகளைப் பழக்குவதற்காக பறவையியல் ஆகிய விலங்கியல் பிரிவுகளை மட்டும் முழுமையாகவும் ஒழுங்காகவும் பயின்றனர்.

இஸ்லாமிய காலத்திற்கு முந்திய அராபியக் கவிதையில் பல விலங்கினங்கள் சிறப்பிடம் பெற்றன. இஸ்லாமிய காலம் தொடங்கிய பின் ஒட்டகங்களும், குதிரைகளும், பிற விலங்குகளும் அராபியக் கவிதையில் தொடர்ந்து இடம்பெற்றன. வீட்டு விலங்குகள் பற்றி, குறிப்பாக வெள்ளாடுகள், பூனைகள், பறவைகள் பற்றி அழகிய செய்யுள்கள் எழுதப் பெற்றன. பிந்திய நூற்றாண்டுகளில் காகமும் சிங்கமும் கவிதையில் சிறப்பிடம் பெறறுவந்தன. காகப் பிரிவுத் துன்பத்தையும், சிங்கம் வலிமையையும் துணிவையும் காட்டின இக்கருத்துகள் அராபியர் விரும்பியவையாகும்

உரைநடையைப் பொறுத்தவரையில், இந்திய விலங்குக் கதைகளின் திரட்டு 'கலிலாஹ் வா திம்னா' எனும் அராபிய மொழிபெயர்ப்பாக

(தொடர்ச்சி IV பக்கம் பார்க்க)




அப்துர் ரஹ்மான் அஸ்—சூஃபி (903-986) எழுதிய ''தி புக் ஆஃப் ஃபிக்ஸ்ட் ஸ்டார்ஸ்'' எனும் நூலிலுள்ள தென் விண்மீன் குழு. பண்டைய கிரேக்க மரபுக்கேற்ப இவரும் விண்மீன் குழுக்களை விலங்கு, மனித அல்லது பொருள் வடிவில் காட்டினார்.

ஒளிப்படம்: © தேசிய நூலகம், பாரிஸ்

**அப்துல் ஹமீது ஹம்தான்:** எகிப்தியர்; இஸ்லாமிய வரலாற்றறிஞர்; இஸ்லாம் பற்றிப் பல அறிவியல் நூல்கள் எழுதியுள்ளார். இப்போது வரலாறு, அறிவியல், மெய்ஞ்ஞானம் பற்றிய பல அராபியச் சுவடிகளைப் பதிப்பித்து வருகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

# குருதியுறிஞ்சும் வெளவாலின் தனி வாழ்க்கை

மேரியன் ஸ்டாம்ப் டாக்கின்ஸ்



ஒளிப்படம்: சி.வி.வி. ஃ ஜாக்கானா, பாரிஸ்

*வெப்பமண்டல அமெரிக்காவிலுள்ள குருதியுறிஞ்சும் வெளவால் (அளவு 6-9செ.மீ.)*

**...மற்றும் விலங்குப் பண்புகளுக்கு அரிய எடுத்துக்காட்டுகள்**

உலகம் என்பது ஒன்றே என்று மனித இனம் எண்ணுகிறது இக் கருத்துக்கு மாறான மற்றொன்று நிலவுவதை, நாம் உணருவதில்லை. நமது நகரைச் சுற்றியுள்ள பகுதிகள், அஞ்சல் நிலைய வட்டங்களாகவும், நமக்கும் நம் அண்டையில வாழ்வோருக்குமிடையே பிரிக்கப்பட்டுள்ள பகுதிகளாகவுமே இருப்பதாக எண்ணுகிறோம். ஆனால் பூனைகள் இதே பகுதியை வேறுமுறையில் பகுத்துப் பார்க்கின்றன. சிறு பறவைகளுக்கு இவை பரந்த பகுதிகளாகத் தோன்றுகின்றன. பறவைகளைப் பொருத்தவரை, பெரிய பறவைகளிடமிருந்து காத்துக்கொள்ள வேண்டிய


பெரிய பகுதிகளாகத் தோன்றுகின்றன மனிதர்களின் எல்லைக்கோடுகளைப் பற்றி அவை கவலைப்படுவதில்லை

பிராணிகளின் வாழ்க்கைமுறையை ஆராய்ந்து பார்த்தால், நமது உலகினின்றும் முற்றிலும் மாறுபட்ட உலகங்களின் பலகணியாக இவ்வாராய்ச்சி விளங்குவதைக் காணலாம். பல மிருகங்களின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய வியத்தகு உண்மை




படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம்: ஜார்ஜ் கெர்ஸ்டர் © ராஃபோ பாரிஸ்




வரைபடம்: ''அனிமல் லேங்குவஜ்'' மைக்கிள் பிரைட் © பி.பி.சி. லண்டன்

கென்யாவிலுள்ள அம்போசெலி தேசியப் பூங்காவில் மரங்களில் வாழும் குரங்குகளை ஆராய்ந்தபோது அவை தம்மைக்கொல்லும் மூன்று வகை எதிரிகளான சிறுத்தை கழுகு. பாம்பு ஆகியவற்றிற்கேற்ப அறிவிப் பொலி பெறுகின்றன என்பது தெரிய வந்தது குரங்கு ''சிறுத்தை'' ஒலி யைச் கேட்டதும் அருகிலுள்ள மரங் களுக்கு ஒடுகிறது; ''கழுகு'' அடர் புதருக்குச் செல்கிறது; ''பாம்பு'' நீண்ட புல்செடிகளை உற்றுப்பார்க் கிறது.

## உயரமான கறையான் புற்றுகள்

கறையான்கள் தம் தேவைக்கே;ற சூழலை ஏற்படுத்துவதற்காக. குளு குளு வசதியுள்ள புற்றுகளைக் கட்ட திறமை கட்டுகின்றன. அடிநில அறை களாகத் தொடங்கும் புற்றுகள், கறை யானின் தொகை பெருகப்பெருக நிலப்பரப்புக்கு மேலே எழுந்து 6 மீ. வரை உயர்கின்றன. கறையானின் தொகை பெருகுவதால் காற்று மிகுதி யாகத் தூய்மையாகவேண்டும் உயர் ஈரபபதமும் வெப்பமும் கறையான் களை அழித்துவிடும். அவை தட்ப வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துவ தற்காகப் புற்றினுள் ஏராளமான காற்றுப்புழைகளை அமைக்கின்றன.

ஒளிப்படம்: மால்கம் கிழுடிக்

படிப்பகம்

www.padippakam.com

களை உணரமுடிகிறது. வெளவால்கள் ஒன்றுக்கொன்று தேவைப்பட்ட போது உணவு தந்து உதவுகின்றன. அவ்வாறு செய்யப்பட்ட உதவியை, அவை நன்றியுடன் நினைவில் வைத்துக் கொள்கின்றன என்ற வியத்தகு உண்மையை யார்தான் எதிர்பார்த்திருக்க முடியும்? இவ்வெளவால்கள் தங்கள் இனத்தில் யார் பசியில் வாடுகின்றனர் என்பதை உணர்ந்து, ரத்த உணவு தந்து உதவுகின்றன என்பதை ஜி. எஸ். வில்கின்சன் நிரூபித்துக் காட்டியுள்ளார். அதிலும், ஒரு வெளவால் தனக்கு ஏற்கெனவே உணவு தந்து பசியிலிருந்து காத்த, மற்றொரு வெளவாலுக்கே உதவுகிறது உணவு தந்து உதவாத மற்றொரு வெளவாலுக்கு உதவுவது குறைவு.

கினியாவில் உள்ள அம்பொசெலி தேசியப் பூங்காவில். வெர்வெட் இனக் குரங்குகளைப்பற்றி ஆராய்ந்த டோரதி செனி, ராபர்ட் சீபார்த் என்பவர்கள் எதிர்பாராத உண்மைகளை உணர்ந்தார்கள். தம்மைத் தாக்கவரும் மற்ற மிருகங்களின் தன்மையைப் பொருத்து—வெவ்வேறு விதமான எச்சரிக்கை ஒலிகளை இவை எழுப்புகின்றன. பாம்பைப் பார்த்த குரங்கு எழுப்பும் ஒலி, மற்ற குரங்குகளைத் தரையில் பார்க்கச் செய்கின்றன. சிறுத்தையைப் பார்த்தவுடன் வேறு விதமாக எழுப்பும் ஒலியைக் கேட்டு, மற்ற குரங்குகள் மரங்களுக்கு இடையில் ஓடி ஒளிகின்றன. கழுகு வந்தால், வேறொரு வகை ஒலியை எழுப்புகின்றன. இதனால், குரங்குகள் வானை நோக்குகின்றன குரங்குகள் தம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை மற்ற குரங்குகளுக்கு குறிப்பிட்டுச் சொல்லுகின்றன

'இக்குரங்கினத்தில், குடும்பங்களுக்கு இடையே உள்ள உறவு, தெளிவாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. தன்னைக் கடுமையாக எதிர்க்கும் ஒரு குரங்கின் நெருங்கிய நண்பர்களையும் குடும்பத்தினரையும் இனங்கண்டு கொண்டு மற்றொரு குரங்கு தாக்குகிறது என்பதை, மேற்கூறிய ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

பிராணி இனம் தம்மைச் சுற்றி நடப்பதைப் பற்றிப் பேசிக் கொள்ளுவது, தங்களிடையே மற்ற குடும்பங்களைப் பற்றி அறிந்து வைததிருப்பதும் நாம் பிராணிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள் என்று எண்ணுவோருக்கு மகிழ்ச்சி தருவதில்லை. பிராணிகளின் வாழ்க்கை முறையை ஆராய்ந்தால் நமக்கும் அவற்றுக்கும் இடையே வேறுபாடுகள் குறைவு என்பதை உணரலாம்.

பெண் துணையைத் தேடிக்கொள்வதில், நாம் பிராணிகளிலிருந்து வேறுபட்டிருக்கிறோம் என்று நாம எண்ணுகிறோம். நாய் வளர்ப்பிலும் பயிர்த்தொழிலிலும் ஈடுபடும்போது, பிராணிகள் தங்கள் இனத்தில் எந்தப் பெண் துணையையும் ஏற்றுக் கொள்ளும் என்று கருதிச் செயல்படுகிறோம் ஆனால், அவை துணையைத் தேடும்போது, குறிப்பாகப் பெண் இனம், ஆணினத்தின் சமூக அந்தஸ்து, செல்வ வளம் இவற்றைக் கருத்தில் கொள்கின்றன என்பது நாம் அறியாத உண்மையாகும்

ஈ பிடிக்கும் சிறு பறவையினத்தின் பேடைப் பறவைகள், வேனிற்காலத்தில் முதலில் வந்து, இடத்தைக் கைப்பற்றிக்கொள்ளும் ஆண் பறவைகளையே துணையாகத் தேர்ந்தெடுக்கின்றன. ''இவை பெரும்பாலும், வயது முதிர்ந்த பறவைகள் எனவே, முதிர்ச்சியடைந்த—வாழ்வில் நன்கு நிலைத்துவிட்ட ஆண்பறவைகளை அவை விரும்புகின்றன. ஸ்வீடனில் ஆர் அலடாலோவும் அவருடன் பணியாற்றுவோரும் குறிப்பிட்ட பகுதியில் இருந்த இப்பறவைகளின் கூடுகள் மாற்றிவைத்து ஆராய்ந்து பார்த்தனர். பெண்பறவைகள் ஆண் பறவைகளின் சொந்தமான இடங்களைக் கருத்தில் கொண்டே தம்

நரிகளை அராய்வதற்காகப் பயன்படும் அலையாற்றல் கருவியை ஒரு நரி உற்றுப் பார்க்கிறது.



www.padippakam.com

துணையாக, ஏற்றுக் கொள்கின்றன என்பது தெரியவந்தது. பெண் பறவைகள் முட்டையிடுவதற்கு பாதுகாப்பான கூடுகளையும் அதற்குத் தேவையான உயர்ந்த மரங்களையுமே கருத்தில் கொண்டு, துணையைத் தேடின. வயது முதிர்ந்த பறவையிடம் அத்தகைய இடம் இருந்தால், அப்பறவையே ஏற்றுக் கொள்ளப்பட்டது. வயதில் இளைய பறவையிடம் அத்தகைய இடம் இருந்தால் அவற்றையே பெண் பறவைகள் விரும்பின.

அமெரிக்காவில், ரான்டிதார்ன் ஹில் தொங்கும் ஈக்களைப்பற்றி ஆராய்ந்து கண்ட உண்மை இது: உணவு கொடுத்தால் மட்டுமே பெண் எக்சன் ஆணுடன் உறவுகொள்கின்றன. பூச்சி உணவை அதிகமாகத் தரும் ஆணுடன் அதிகநேரம் கூடுகின்றன. அதிகமுட்டைகளை இடுகின்றன.

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளால், பிராணிகளின் வாழ்க்கை சிக்கலானது. மனித இனத்தைப் போன்றதே என்பதை உணரலாம். இத்தகைய ஒற்றுமையை எங்கே, அதிகம் காணலாம்? குரங்குகளிடமா? பபூன் குரங்குகளிடையே, ஆண்களின் ஆதிக்கம் மிகுந்துள்ளது. பெண் இனத்தை ஆண்கள் கடித்துக் கட்டுப்படுத்துகின்றன என்பதைக் காணும் போது, மனித இனத்தின் பிரதிபலிப்பைக் காணமுடிகிறது.

சிம்பன்சி குரங்குகள் ஒழுக்கக் கட்டுப்பாடற்ற வாழ்க்கை வாழ்கின்றன அந்த இனத்தில் உடன்பிறந்தோர் மற்றும், நெருங்கிய உறவினரிடையே — நிலவுகின்ற — அரசியல் உறவின் அடிப்படையிலான சமத்துவத்தைக் காணும் போது மனித இனத்துடன் உள்ள ஒற்றுமையை உணர முடிகிறது. எறும்புகள் மனிதர்களைப் போலவே அணிவகுத்துப் போருக்குச் செல்வதைக் காணமுடிகிறது.

பல்வேறு வகைப்பட்ட பிராணிகள், பல்வேறு விதமான வாழ்க்கை முறைகளை மேற்கொள்கின்றன. மனித இனத்தோடு பிராணி இனத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இரண்டு வகையான முடிவுகளுக்கு வரலாம். உயிர் வாழ்தல், இல்லறத் துணையைத் தேர்ந்தெடுப்பது, குழந்தை வளர்ப்பு, சமுதாய உறவுகள் ஆகியவை பற்றிய மனித இனத்தின் கருத்துகள் இவற்றில் ஒன்று. நாம் வாழும் பூமியில் பல கோடி உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றையே கூர்ந்து நோக்கினால் அவை வளமுடனும், முழுமையுடனும் வாழ்வதை அறியலாம். மனித இனத்துக்கு மட்டுமே உரியவை என்று நாம் கருதி வந்த சில, மற்ற உயிரினங்களிடையேயும் நிலவுகின்றன என்பதை உணரும் போது நமது செருக்குக்கு அது ஓர் இடியாகத் தோன்றக்கூடும். நமது இனம் மட்டுமே முக்கியமானது என்று கருதுவது அகந்தையாகும்.

தனக்குத் துன்பம் நேர்கையில் வந்து உதவும் நிலை இருப்பதால் அத்தகைய குழுவில் இணைந்து வாழ்வதையே பல பிராணிகள் விரும்புகின்றன. ஒன்றுபட்டு நிற்பது நன்மை தருகிறது. இது சுயநலம் காரணமாக எழுந்த ஒருமைப்பாடாக இருப்பினும் — ஒருமைப்பாடு நிலவுகிறது என்ற அளவில் வரவேற்கத் தக்கது. போட்டியும் சண்டையும் நிறைந்த இச்சமுதாயத்தில் மனித இனமும் இதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழில்: எஸ். சம்பத்குமார்

---

**மேரியன் ஸ்டாம்ப் டாக்கின்ஸ்**: பிரிட்டிஷ் பண்பியலார்; ஆக்ஸ்ஃபோர்டில் சாமர்வில் கல்லூரியில் உயிரியல் பேராசிரியர்: அங்கு இவ்வம்மையார் விலங்குகளின் நடக்கைப் பற்றிக் கற்பிக்கிறார்; ஆக்ஸ்ஃபோர்டில் விலங்கியல் துறையில் விலங்கு நடக்கையை விலங்கு நலத்திற்குப் பயன்படுத்துவது பற்றி ஆராய்ந்துவருகிறார். ''அனிமல் சஃபரிங்: தி சைன்ஸ் ஆஃப் அனிமல் வெல்ஃபேர்'' எனும் நூல் எழுதியுள்ளார். இது விலங்குகளின் துன்பத்தை மதிப்பிடுவதை விளக்குகிறது. இவர் பண்பியலின் இன்றைய பிரச்சினைகளை விளக்கும் ''அன்ராவலிங் அனிமல் பிஹேவியர்'' எனும் நூலும் எழுதியிருக்கிறார்.

## நூல்கள்

**ஸ்பீக்கிங் ஆ∴ப் ஏப்ஸ்: எ கிரிட்டிக்க[illegible] அந்தாலஜி ஆ∴ப் டு வே கம்யூனி[illegible]கேஷன் வித் மேன்:** பதிப்பாசிரியர்கள்: தாமஸ் ஏ. செ[illegible]யாக், ஜீன் உமிக்கர்—செபியா[illegible] பிளீனம் அச்சகம், நியூயார்[illegible] லண்டன், 1980.

**அனிமல் கம்யூனிக்கேஷன்: டெக்னிக்[illegible] ஆ∴ப் ஸ்டடி அண்டு ரிசல்ட்ஸ் ஆ∴[illegible] ரிசர்ச்:** பதிப்பாசிரியர்: தாமஸ் [illegible] செபியாக்; இண்டியானா பல்கலை[illegible]கழக அச்சகம், புளூமிங்டன் இண்[illegible]யானா, யு எஸ் ஏ., 1968

**தெ அனிமோ எத் தெ ஹோம்:** பதி[illegible]பாசிரியர்கள்: ஷாக் ஹாய்னா[illegible] ரோலன் கேர். இனவியல் அரு[illegible]காட்சியகம் நெஷாத்தல், சுவிட்ஸ[illegible]லாந்து, 1987

**அனிமல் ஆர்க்கிடெக்சர்** கார்ல் வா[illegible] ஃபிரிஷ்; ஹட்சின்சன், லண்டன்[illegible] 1974

**பியூரிட்டி அண்டு டேஞ்சர்: அ[illegible] அனலிசிஸ் ஆ∴ப் கான்செப்ட்ஸ் ஆ∴[illegible] பொல்யூஷன் அண்டு டாபூ** மே[illegible] டக்லஸ்; ரூட்லெஜ் அண்டு கேகன்[illegible] பால், லண்டன், 1966

**ஹவ் டு ஸேவ் தி வோர்ல்டு: ஸ்ட்ரா[illegible]டஜி ∴பார் வோர்ல்டு கன்செர்வேஷன்[illegible]** ராபர்ட் ஆலன்; லண்டனிலுள்[illegible] கோகன்பேஜிலுள்ள பன்னாட்[illegible] இயற்கை, மற்றும் இயற்கைவள[illegible] பாதுகாப்புச் சங்கம் தயாரித்த உலக[illegible] பாதுகாப்புத் திட்டத்தின் அடி[illegible]படையில் அமைந்துள்ளது.

**லை∴ப் சைன்சஸ் அண்டு சொசைட்[illegible]** பதிப்பாசிரியர்கள் ரேமண்[illegible] டாவ்டல், நிககோல் லெமேர் தாகா[illegible]யோ, உயிர்மருத்துவ, சமூக இய[illegible]களின் கண்டுபிடிப்புகளும், சமூ[illegible] வளர்ச்சியிலும் அதை அறிவதிலு[illegible] இவற்றால் ஏற்படும் விளைவுகளை[illegible]யும் பற்றிய பன்னாட்டுக் கூட்[illegible] நிகழ்ச்சிகள், எல்ஸ்வியர் அறிவிய[illegible] பதிப்பகம், ஆம்ஸ்டர்டா[illegible] நியூயார்க், 1986.


யுனெஸ்கோ கூரியர். மாதந்தோறும் வெளியிடப்படுகிறது பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும் கட்டுரைகளையும் 'யுனெஸ்கோ' கூரியலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம், அவ்வாறு வெளியிட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்படவேண்டும், ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும்போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெறவேண்டும். பதிப்புரிமை அல்லாத புகைப்படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும், கேட்டுப் பெறாத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

துணை தலைமை ஆசிரியர்: ஒல்கா ரோடல்

நிர்வாக ஆசிரியர்கள்:

ஆங்கிலம்: ரோல் மால்கின் கரோலின் லாரன்ஸ் (பாரிஸ்)

ஸ்பானிஷ்: ஃபெர்னான்டெஸ்-ஃபிரான்சிஸ்கோ ஸாண்டடாஸ் (பாரிஸ்)

ரஷ்யன்: நிக்கோலாய் குஸ்நெட்சோ

ஜெர்மன்: வெர்னர் மெர்க்லி (பெர்ன்)

அராபிக்: அபதல் ரசித் எலசாதக் மஹ்மூதி (கெய்ரோ)

ஜபபானிஸ்; செய்சிரோ காஜிமா (டோக்கியோ)

இத்தாலியன்: மரியே கெய்டேட்டி (ரோம்)

ஹிந்தி; ராமபாபு சர்மா (டெல்லி)

ஹீப்ரு: அலெக்ஸாண்டர் பரோய்டே (டெல்-அவிவ்)

பெர்சியன்: சதோ வெனினி (டெஹ்ரான்)

டச்சு: பல் மோரென (ஆண்ட்வெர்ப)

போர்த்துக்கீஸ்: பெனடிக்டோ சில்வா (ரியோ டி ஜெனீரோ)

துர்க்கியஸ்: மெஃப்ரா இல்கசார் (இஸ்தாம்புல்)

உருது: ஹக்கீம் முஹம்மது சையத் (கராச்சி)

கட்டிலான்: ஜோன் கார்ரெராஸ் மார்ட்டி (பார்சிலோனா)

மலேசியா: அஸீஸா ஹம்ஸா (கோலாலம்பூர்)

கொரியன்: பைக்சியாங் (சியோல்)

சுவாஹிலி: டெமினோ ருத்தாயே பெசிப்வா (தார்-எஸ். ஸலாம்)

ஃபிரெய்லி: ஃபரெடிரிக் போட்டர் (பாரிஸ்)

கிரேடோ-செர்ப, மாசிடோனியன, செர்போ-கிராட்

ஸ்லோவேன்: பஸிடர் பெர்க்கோவிக் (பெல்கிரேட்)

சீனம்: ஷென் குவோஃபென் (பீகிங்)

பல்கேரியஸ்; கோரன் கோட்சேவ் (சோஃபியா)

கிரீக்: நிக்கோலஸ் பாபாஜியார் ஜியோ (ஏதென்ஸ்)

சிங்களம்: எஸ். ஜே. சுமனசேகரா பண்டா (கொழும்பு)

ஃபின்னிஷ்; மார்ஜட்டா அக்சேனன் (ஹெல்சிங்கி)

ஸ்விடிஸ்: லினா ஸ்வென்சன் (ஸ்டாக்ஹோம்)

பாஸ்க்: குருட்ஸ் லாரனகா (சான் செபாஸ்டியன்)

தாய்: சாவித்திரி சுவனசத்ஹித் (பாங்காங்)

வியத்னாமிஸ்: தாவோ/துங் (ஹனாய்)

பாஸ்டோ: நஸீர் செஹாம் (காபூல்)

எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியரிக்கே எழுதப்படவேண்டும்




Edited and Published by M. Mohammed Mustafa (Manavai Mustafa) for the Southern Languages Book Trust, 18, East Spurtank Road, Chetput, Madras-600 031 and Printed by B. Venugopal Reddy at PrasadProcess Private Limited, Madras-600026

படிப்பகம்

www.padippakam.com

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

களைத் தோற்றுவித்திருக்கின்றன. வால்ட் டிஸ்னியும் மற்றக் கேலிச் சித்திரத் தயாரிப்பாளர்களும் விலங்குகளிடம் மனித இயல்புகளைக் கண்டனர். விலங்களுக்கும் மனிதர்களைப் போல் கவலைகளும், இன்ப துன்ப உணர்வுகளும் உண்டு என்பதை அவர்கள் சித்தரித்தனர். இவை மனிதனுக்கும் விலங்குகளுக்குமிடையிலான உறவு நிலைகள் குறித்த நமது சிந்தனையை மேலும் குழப்பிவிட்டிருக்கின்றன. நகர் மயமாக்குதலும் வேளாண்மையைத் தொழில் மயமாக்குதலும் மனிதனுக்கும் விலங்குகளுக்குமிடையிலான உறவு நிலையைச் சீர் குலைத்து, விலங்குகளை முற்றிலும் வேறுபட்டனவாக உருவகித்துக் காட்டியுள்ளன.

மனிதரின் விலங்கு இயல்புகள் மனிதப் பண்பியல் ஆய்வாளர்களால் பெருமளவில் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. வாழ்க்கை ஒரு காடு, மனிதனுக்கு மனிதனே ஓநாய், வல்லவன் நலிந்தவனை விழுங்குகிறான், ஆணுக்குப் பெண் அடிமை என்றெல்லாம் கூறி இவர்கள் இந்தச் சிந்தனையை வளர்க்கிறார்கள்.

இங்கும் எல்லையை வரையறுப்பதில் சிக்கல் தோன்றுகிறது. கோலட்கில்லாமின் குறிப்பிடுவது போல், ஒரு பொதுவான விலங்கு இயல்பு மனிதனை தேவையான சமயத்தில் ஒரு வாலில்லாக் குரங்காக, ஒரு ஓநாயாக அல்லது ஒரு காட்டுக்கோழியாக மாற்ற முடியுமானால், ஓநாயைக் காட்டுக் கோழியாகவோ, வாலில்லாக் குரங்கை ஓநாயாகவோ விளக்கிக் கூற முயற்சி எதுவும் எடுக்கப்படுவதில்லை. இதிலிருந்து ஒன்று மட்டும் தெளிவாகிறது. அதாவது, மனிதப் பண்பியல், விலங்கினை விவரிக்கிறது; ஆனால் மனிதனை விளக்கிக் கூறுகிறது. இங்குச் சுட்டிக் காட்டப்படுவது மனிதனேயன்றி, சமூகப் பிராணி நடத்தை முறை அன்று. மனிதனை நியாயப்படுத்துவதை மூடி மறைக்கும் முகமூடியாக விலங்கு பயன்படுகிறது.

இந்தக் கருத்து மனிதனுக்கு நெருக்கமான உயிரினங்களுக்கு (பாலூட்டிகள், சமூகப் பூச்சி இனங்கள்) குறிப்பாகப்பொருந்துவதாகும். பல நேர்வுகளில் விலங்குகளைக் கொண்டு பரிசோதனைகள் நடத்துவதில் இடம் மாற்றுவதில் ஏற்படும் அதே இடர்ப்பாடுகள் நேரிடுகின்றன ஏனெனில், மனிதர்களுக்குப் பயன்படுத்துவதற்கான மருந்தினைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கு நம்பகமான பரிசோதனைப் பிராணியும் மனிதன் தான்.

கொடூரமானவை என்றும் மூர்க்கமானவை என்றும் நாம் கருதும் விலங்குகள் சிறிதளவேனும் சுதந்திரம் அனுபவிக்கும் ஒரே துறை கற்பனைக் கதைகள் தாம். நமது கற்பனைகளிலும் கதைகளிலும், ஓநாய், புலி கழுதைப் புலி போன்ற விலங்குகளை வேதாளங்கள், மனிதக் குதிரைகள், மந்திர ஓநாய்கள் பனி மனிதர்கள் ''அந்நியப்'' பிராணிகளாகச் சித்திரிக்கிறோம்.

ஒருவேளை நமக்கும், விலங்கினங்களுக்குமிடையிலான ''சரியான தூரத்தை'' நாம் உணர்ந்துகொள்ளத் தவறியிருக்கலாம். அந்தச் சரியான தூரத்திலிருந்து நாம் விலங்குகளுடன் அதிகக் கொடூரமோ பயமோ இன்றிச் செய்தித் தொடர்பு கொள்ளலாம்; அதேசமயம், நமது கற்பனையையும் தூண்டிவிடலாம். சில விலங்கினங்களுடன் மிக நெருக்கமாக இருக்கிறோம்; வேறு சில இனங்களைக் கொன்றழிக்கிறோம். நாம் வாழும் இடங்களை அசுத்தப்படுத்தும் விலங்குகளை வெறுத்து ஒதுக்குகிறோம். இதன்மூலம் நமது உள்ளத்திலும், உலகிலும் ஆபத்தான சிக்கல்களை உண்டாக்குகிறோம்.

---

(பத்தாம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்வதுபோல் தோன்றும். அது மேகங்களை ஊடுருவிச் செல்லும்; பறவைகளை வீழ்த்திவிட்டு முந்திச் செல்லும். மந்திர சக்தியால்தான் அதன் ஓட்டத்தை நிறுத்த முடியும். போரின்போது போர்க்குதிரை எசமானருக்குக் காப்பாளராகவும், வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும், மருத்துவராகவும் விளங்கியது. ஒரு போர்வீரன் தன் குதிரையை இழந்துவிட்டால், அவன் தன் வலிமையை இழந்தவனாகிறான்.

பண்டைய இந்தோ - ஐரோப்பிய மக்களினங்களிடையே கலைமான் வழிபாடு நிலவிவந்தது குதிரை வளர்ப்புத் தொடங்கியதும், இந்த வழிபாடு குதிரை வழிபாடாக மாறியது. அவர்கள் வணங்கிய பறக்கும் கலைமான், பறக்கும் குதிரையாக மாறியது. இன்றுகூட ஐரோப்பாவின் சில பகுதிகளின் நாட்டுப்புறக் கலைப் பொருள்களில் மான்கொம்பு உருவங்களைக் காணலாம். பண்டைய கெல்ட்டிய மக்கள், மான் கொம்புகள் கொண்ட ஒரு தெய்வத்தை வழிபட்டனர் கிரேக்கர்களின் வேட்டைத் தெய்வமாகிய ஆர்ட்டிமிஸ், பெண்மான்கள் புடைசூழச் சித்திரிக்கப்பட்டது. மான் கொம்புடன் கூடிய இறகுகள் உடைய ஒரு பிராணியின் ஓவியம், சைபீரியாவில் ஓர் இடுகாட்டில் கிடைத்துள்ளது.

மான் வழிபாட்டிலிருந்து குதிரை வழிபாட்டிற்கான மாற்றம் மிக மெதுவாகவே நடைபெற்றது. நெடுங்காலம் வரையில் குதிரை மானின் மறுபிறவி என்றே கருதப்பட்டு வந்தது. ஹிட்டைட்டு, கெல்ட் இனத்தவர்கள் குதிைரகளுக்கு மான் வேடமிட்டுவந்தனர். ஆரிய மககளினங்கள் பலிகொடுக்கப்படும் குதிரையின் தலையை மான்கொம்புகளால் அலங்கரித்தனர். அல்ட்டாய்ப் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இடுகாடுகளில் மான் முகமூடிகளுடனான குதிரை எலும்புக் கூடுகள் கிடைத்துள்ளன (பிப்ரவரி 1977 'யுனெஸ்கோ கூரியர்' காண்க). சித்தியர்கள், தங்கள் 'குதிரைகள் இறகுகள் அமைந்த மான்கள்போல் தோன்றும் வகையில் அக்குதிரைகளின் தலைகளில் நெற்றிப்பட்டங்களை அணிந்தனர்.

துருக்கிய - மங்கோலிய மக்கள் இனங்களிடமும் மான்வழிபாட்டிற்குப் பதில் குதிரை வழிபாடு தோன்றியது. இந்த மாற்றம் ஏன், எங்கே ஏற்பட்டது என்பது சரியாகத் தெரியவில்லை. எனினும், கி.மு. 4000 ஆண்டுக்கு முந்திய பண்பாடுகளின் சிதைவுகள் ரஷியாவின் ஐரோப்பியப் பகுதிகளில் அண்மை ஆண்டுகளில் கிடைத்துள்ளன. அந்தக் காலத்து மக்கள் காட்டுக் குதிரைகளைப் பிடித்துப் பழக்கி வந்ததாக இவை தெரிவிக்கின்றன. இதே காலத்தில் குதிரை வழிபாடும் தொடங்கியிருக்க வேண்டும். பண்டையக் குடியிருப்புகளிலும், இடுகாடுகளிலும் காணப்படும் குதிரைகளின் எலும்புகளும் மண்டையோடுகளும் இதற்குச் சான்று, இதே காலஅளவின்போது ஐரோப்பிய வன்பாலைப் பகுதிகளில் குதிரைகளின் தலைகளின் வடிவில் அமைந்த கற் செங்கோல்கள் உருவாக்கப்பட்டன. இந்தச் செங்கோல் ஒரு குடித்தலைவரின் ஆற்றலின் சின்னமாகக் கருதப்படுகிறது.

---

(பதின்மூன்றாம் பக்கத் தொடர்ச்சி)

கவலையை மறக்கிறோம் இவ்வாறு இயற்கை உலகைக் காணும்போது இரத்த அழுத்தம் குறைகிறது. செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்களுக்குப் பொறுப்புணர்ச்சி மிகுதியாகிறது. குறிப்பாகக் கடுமையான நோய், உடல்ஊனம் அல்லது தனிமை காரணமாக அதிகம் நடமாட இயலாதிருக்கும் நோயாளிகள் செல்லப் பிராணிகளைப் மிகுந்த பொறுப்புடன் பேணுகிறார்கள்.

குழந்தைப் பருவத்தில் இயற்கை உலகுடன் தொடர்பு கொள்வதற்குச் செல்ல பிராணி உதவுகிறது. மற்ற உயிரினங்களை மதித்து நடக்கவேண்டும் என்ற பாடத்தையும் அது கற்பிக்கிறது. சற்று வளர்ந்த சிறுவர்களிடம் செல்லப் பிராணியைப் பேணி வளர்க்கும் பொறுப்புணர்வு, அவர்களின் தன்மதிப்பையும். தன்னம்பிக்கையையும், சுதந்திர உணர்வையும் வளர்க்கின்றது. குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரையில் நமது வாழ்நாளில் பல்வேறு கட்டங்களில் பல்வேறு நற்பணிகளைச் செல்லப் பிராணிகள் நமக்குப் புரிகின்றன. ஒரு பிராணியுடன் நல்லுறவு கொண்டுவிட்டால், மற்ற மக்களுடன் நல்லுறவு கொள்வது மிக எளிது.

---

(பதினேழாம் பக்கத் தொடர்ச்சி)

றும், தறுவாய்க்கேற்ப மொழியைப் பயன்படுத்தும் திறன் அவற்றுக்குக் கிடையாது என்றும் பெரும்பாலோர் கருதுகின்றனர். இதனாலேயே, சிந்தனையின்றி சொன்னதைத் திரும்பச் சொல்லுவதை ''கிளிபோல் பேசுதல்'' என்று குறிக்கிறோம். எனினும், அமெரிக்காவில் ஒரு பல்கலைக் கழகத்தில், ஆராய்ச்சியாளர்கள், 'அலெக்ஸ் என்ற ஆஃப்ரிக்கக் கிளிக்கு, தாள், கல், தக்கை, நீர் போன்ற 20 பொருள்களுக்கான பெயர்ச் சீட்டுகளை அறிந்து கொள்வதற்கு வெற்றிகரமாகப் பயிற்சியளித்தனர். ஐந்து வண்ணங்களையும், பல்வேறு வடிவங்களையும், ''வேண்டும்'', ''இங்கே வா'' என்பன போன்ற ஆணைகளை அறிந்துகொள்ளவும் அதற்குக் கற்பிக்கப்பட்டது. இந்தச் சொற்களை அறிவாற்றலுடன் ஒருங்கிணைத்து, ஐம்பதுக்கும் அதிகமான பொருள்களை—சிலசமயம் பயிற்சியின்போது கற்பிக்கப்படாத சில பொருள்களைக் கூட—அடையாளங் காட்டவும், கேட்கவும், மறுக்கவும் அது கற்றுக் கொண்டது. ஆனாலும், பயிற்சி



படிப்பகம்

யாளர்களுடன் உரையாடும் திறனை பெறுவதற்கு அலெக்ஸ் வெகுதூரம் செல்ல வேண்டியிருந்தது. 'அலெக்ஸ்' கிளியின் திறன், ஒரு வகையான 'ஹான்ஸ்' குதிரை விளைவுதான் என்று பல விஞ்ஞானிகள் கருதினார்கள். எனினும் அலெக்சின் சாதனை, மனிதக் குரங்குகளின் சாதனையை விஞ்சுவதாக இருந்தது.

தற்போதைக்கு பேசும் பிராணிகள்—அதாவது மனிதருடனோ தங்களுக்குள்ளாகவோ உரையாடுகின்ற பிராணிகள்—என்பவை கற்பனைக் கதைகளிலும், குழந்தைகள் இலக்கியங்களிலும் காணும் பாத்திரங்களாகவே இருந்து வரும். மனிதர் அல்லாத உயிரினங்களுக்கு மொழித் திறனைக் கற்பிக்கும் முயற்சிகள் அனைத்துமே தோல்வியடைந்துவிட்டன. இதனால், மனிதரும் பிராணிகளும் செய்தித் தொடர்பு கொள்ளவில்லை. என கூறிவிட முடியாது. ஆட்டிடையனுக்கும் அவனது நாய்க்கும், தேர்ந்த குதிரைவீரருக்கும் அவரது குதிரைக்கும் இடையே மிகச் சிறந்த முறையில் செய்தித் தொடர்பு நடைபெறுவதைக் காண்கிறோம். ஆனால் இந்தச் செய்தித் தொடர்புக்கும், மனிதருக்கிடையிலான செய்தித் தொடர்புக்குமிடையில் அடிப்படையில் வேறுபாடு உள்ளது. அருவக் குறியீடுகளையும், இலக்கண விதிகளையும் கொண்ட மொழி, மனிதர்களின் தனிச் சிறப்பான சாதனம். மனிதர்தாம் அந்த மொழித்திறனை எளிதாகவும், இயற்கையாகவும் ஈட்டுகிறார்கள். ஒரு மனிதன் அவனது இயல்பான வளர்ச்சியின்போது மொழித்திறனைப் பெறவில்லையென்றால், அவனிடம் ஏதோ கோளாறு எனக் கருதுகிறோம். நாம் வாழும் சிக்கலான சமூக—பொருளாதார உலகுடன் ஒட்டி வாழ்வதற்கு நமக்கு மொழி தேவை. விலங்குகளுக்கு மொழி தேவையில்லை; மொழியின்றியே அவை தங்கள் தேவைகளைத் திறம்பட நிறைவு செய்து கொள்கின்றன.

ஆனால், இவை அனைத்தும் உண்மையாயின், பேசும் பிராணிகள் பற்றி இத்துணை காலத்தையும், முயற்சியையும், பொருளையும் மக்கள் ஏன் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள்? இந்த முயற்சியினால் நமக்கு என்ன லாபம் கிடைக்கும்? எந்தெந்தப் பிராணிகள் உண்மையில் சிந்திக்கின்றன, பேசுகின்றன என்பதை அறிவதும், அவற்றின் வாழ்க்கை குறித்து அவற்றிடமே கேட்டறிவதும் சுவையானதுதான். ஆயினும், இந்த வகை உரையாடலை நடத்துவதில் நாம் ஒருபோதும் வெற்றி கண்டதில்லை; வெற்றிக்கு அருகில் கூட சென்றதில்லை. மனிதனின் மொழியும், அவனது தன்னுணர்வும் அவனை விலங்குகளின் உலகிலிருந்து தனிமைப்படுத்தி வைத்திருக்கின்றன. ஆதாமும் ஏவாளும் தன்னறிவுக்கு அளித்த விலை ஈடன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டதுதான். எனினும், புராணங்களிலும், தேவதைக் கதைகளிலும், குழந்தை இலக்கியங்களிலும், அண்மைக்காலத்திய மதிநுட்பம் குதிரைகளிலும், பாடும் மனிதக் குரங்குகளிலும், பேசும் கிளிகளிலும், இந்தத் தனிமை தற்காலிகமானதுதான் என்ற நம்பிக்கையினைக் காண்கிறோம்.

(2[illegible]-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கு ஐரோப்பாவில், சார்லிமான் பேரரசர், ''ஓநாய் வேட்டை''யை ஏற்படுத்தி, ஓநாய்களைக் கொல்வதை அமைப்புமுறையாக்கினார். தனது சிற்றரசர்கள், ஓநாய்களை வேட்டையாடுவதற்காகத் தங்கள் நாட்டில் இரு அதிகாரிகளை நியமிக்கவேண்டும் என ஆணையிட்டார். இந்தமுறை அடிக்கடி மாற்றப்பட்டது. ஆனால், இறுதியாக பதினாறாம் லூயி மன்னர் 1787 ஆகஸ்ட் 9இல் ஒரு சிக்கன நடவடிக்கையாக ஓநாய் வேட்டை முறையை ஒழித்தார். முதலாம் நெப்போலியன் மீண்டும் ஓநாய் வேட்டைமுறையை ஏற்படுத்தினார். அரசவை வேட்டைத்துறைத் தலைவரிடம் அதன் கண்காணிப்பு ஒப்படைக்கப்பட்டது. பெரும்பெரும் நிலப்பிரபுக்கள் ஓநாய் வேட்டை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். இந்த முறையும் 1971 இல் நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் ஒழிக்கப்பட்டது.

அயர்லாந்து, அமெரிக்கா, பிரிட்டன், ஃபிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, டென்மார்க், கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, அங்கேரி, நார்வே, சுவீடன், ஃபின்லாந்து ஆகிய நாடுகளில் இன்று ஓநாய் அடியோடு அற்றுப்போய் விட்டது. பல்கேரியா, செக்கோஸ்லாவாக்கியா, இத்தாலி, போலந்து, போர்ச்சுகல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் ஓநாய் அற்றுப் போகுந்தறுவாயில் உள்ளது. அலாஸ்காவிலும், கானடாவிலும், ரஷியாவிலும் பனி படர்ந்த தரிசு நிலங்களில் மட்டுமே இன்று ஓநாய்கள் காணப்படுகின்றன.

ஓநாய் பயன் அல்லது ஓநாய் மனப்பான்மை மறைந்துவிட்டதா? ஒரு புதிய, மூர்க்கமான விலங்கினைக் குறிப்பிடும்போதெல்லாம், மனிதனைத் தின்னும் ஓநாயின் மூர்க்கத்தனத்தையும், கொடூரத்தையுமே ஒருவர் குறிப்பிடுகிறார். இடைக்காலத்தின்போது, குளிர்கால நீண்ட இரவுகளில் நெருப்பினைச் சுற்றி அமர்ந்திருக்கக் கூறப்பட்ட கற்பனைக் கதைகள் ஓநாய் பற்றிய அச்ச உணர்வை வளர்த்தன. பின்னர், செய்தி இதழ்கள், காட்டு விலங்குகளின் தாக்குதல்களை ஓநாய்களின் தாக்குதல்களாகவே திரித்துக் கூறின. ஆட்சியாளர்களும், சமயவாதிகளும் இதற்குத் துணையாக இருந்தனர்.

இன்று ஓநாய் தனது அச்சுறுத்தும் ஆற்றலை இழந்துவிட்டதாகத் தெரிகிறது. விரைவிலேயே ஓநாய் பற்றிய அச்சம் வெறும் கற்பனையாக மாறிவிடலாம். இதற்கு, ஓநாய்கள் அடியோடு அற்றுப்போனதுதான் காரணமாக இருக்கலாமேயொழிய, அதன் நடத்தையை நாம் நன்கு அறிந்து கொண்டோம் என்பது காரணமாக இருக்கமுடியாது.

(இருபத்தியேழாம்பக்கத்தொடர்ச்சி)

''நான் பொய் சொல்லவில்லை. சிறுத்தையையே கேள்'' என்று குரங்கு கூறியது.

''சிறுத்தையே, குரங்கு சொல்வது உண்மையா? என்று ஆமை கேட்டது.

''அது சொல்வது உண்மைதான். ஆனால் அது முக்கியமல்ல. எனக்குப் பசிக்கின்றது; தின்ன வேறொன்றுமில்லையெனக் குரங்கிடம் சொல்கிறேன்'' என்று சிறுத்தை உறுமியது.

ஆமை சிறுத்தைக்கு உறுதி கூறியது:

''சகோதரனே, நீ சொல்வது சரி, ஆயினும் நான் ஒரு வழக்கை விசாரிக்கும்போது, பிறர் சொல்வதை மட்டும் நம்ப விரும்புவதில்லை. நேர் சான்று தேவை. குரங்கு, சிறுத்தை, நான் ஆகிய எல்லோரும் இங்கு இருக்கிறோம். குழியும் கம்பும் இங்குள்ளன. என்ன செய்தீர்கள் எனக் காட்ட முடியுமா? சிறுத்தையே நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். குரங்கு ஓடிவிட முடியாது அதை நான் பார்த்துக்கொள்கிறேன்.''

ஒரே குதியில் சிறுத்தை குழியினுள் மறைந்தது. ஆமை குரங்கை அழைத்துக் கூறியது:

''வெண்முகுடைய குரங்கே, தவளையை எடுத்துச் செல்பவன் ஒருநாள் தேரையை எடுத்துச்செல்வான். ஒவ்வொரு மரத்தையும் முத்தமிடுபவன் ஒருநாள் முள் மரத்தை முத்தமிடுவான், ஈக்களைப் பிடிப்பவன் ஒருநாள் தேனீயைப் பிடிப்பான் என்றெல்லாம் கேள்விப்பட்டதில்லையா?''

ஆபத்திலிருந்து தப்பிய குரங்கு கீழ்கண்டவாறு கூறியது:

''சிறுத்தை சிறுத்தைதான், அகம்கோ இன்னும் அகம்கோதான்! ஒருவருக்கு உதவியது பற்றி நான் ஒருபோதும் வருந்துவதில்லை''

குழியினடியில் திகைத்து நின்ற சிறுத்தையைப் பார்த்து ஆமை கூறியது:

''சகோதரனே, அங்கே அமைதியாக இரு. நம் குணமே நமது மீட்பு; நம் குணமே நமது வீழ்ச்சியுமாகும் என்பதை ஒருபோதும் மறவாதே''

தமிழில் இரா. நடராசன்

(முப்பதாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவந்தது. இது பலருக்குப் புதிதாக இருந்தது, ஐரோப்பாவில் இது ''ஃபேபின்ஸ் ஆஃப் பித்பாய்'' எனும் தலைப்பில் வெளிவந்தது. மூல இந்திய நூல் விஷ்ணுசர்மன் எனும் கற்பனைப் பெயருள்ள பிராமணர் எழுதியதாகக் கூறப்படுகிறது. அவை விலங்குகள் கூறும் கதைகளின் வாயிலாக மந்த புத்தியுள்ள அரச புதல்வருக்கு அறிவுரை வழங்கும் கதைகள். இப்புதிய இலக்கிய வகையை மக்கள் பெரிதும் விரும்பினர். இது விரைவில் அராபிய, இஸ்லாமிய இலக்கிய மரபில் இடம் பெற்றது: பல எழுத்தாளருக்கும் கலைஞருக்கும் உணர்ச்சியூட்டியது.

இஸ்லாமிய நாடுகளில் விலங்கு வடிவங்கள் கலையில் முக்கிய இடம் பெறவில்லை. ஏனெனில், உயிரின உருவமில்லாத அருவமான அலங்காரமே இஸ்லாமிய நாகரிகத்தின் இயல்பாக இருந்தது. ஒவ்வோரினமும் இலக்கியத்திலும், அன்றாட வாழ்க்கையிலுமிருந்து பெறப்பட்ட கருத்துகளுக்கேற்ப, அல்லது அவற்றின் அடையாள, மாந்திரீக முக்கியத்துவத்திற்கேற்ப விளக்கம் பெற்றன.

முஸ்லீம் ஓவியரும் நுண்ணோவியரும் விலங்குகளை வரைந்தனர்; ஆனால் தனி மரபொழுங்கு முறைப்படி வேறு வகையாக வரைந்தனர். அவை நுட்பதிட்டமாகவும் இயல்பு வழுவாமலும் இருந்தன.

தமிழில்: வள்ளுவன் கிளாரன்ஸ்



படிப்பகம்

www.padippakam.com




உலகின் பிற பகுதிகள் பற்றி
அக்கறை கொள்வோருக்காக......

# கூரியர்

உலகில் 34 மொழிகளில் வெளியாகும் ஒரே இதழ்

- ஒரு திங்கள் இதழ். ஒவ்வோர் இதழும் ஒரு தனிப் பொருள்பற்றியது
- பல்வேறு கோணங்களில் சிந்தனையைக் கிளரும் செய்திகள்
- உலகைக் காட்டும் பலகணி
- பல்வேறு நோக்குகளும் பண்பாடுகளும் கூடுமிடம்
- வளர்ச்சி, புதிய தொழில்நுட்பங்கள், மனித உரிமைகள், பண்பாட்டு மரபுச் செல்வம் போன்ற இன்றைய பொருள்கள் பற்றிய கருத்துகளும் செய்தியும் தரும் அரிய கருவூலம்.
- உலக ஒருமைப்பாட்டிற்காகவும் ஒப்புரவுக்காகவும் பணியாற்றும் ஆற்றல்மிகு சாதனம்.

ஆண்டுச் சந்தா
12 இதழ்கள்: 90 ஃபிரெஞ்சு பிராங்கு

வரவிருக்கும் இதழ்களில்:

அச்சிடுதலும் வெளியிடுதலும்
பிரித்துக் கோக்கும் அச்சுமுதல் நுண்சீவல் வரை
காடுகள்
பண்டைய எகிப்துப்பற்றி புதுச் செய்தி

---

## யுனெஸ்கோ கூரியர்

### சந்தா விபரங்கள்:

தனிப்பட்டவர்களுக்கு ரூ. 21 -

கல்வி நிலையங்கள், நூலகங்களுக்கு ரூ 19/-

தனி இதழ் ரூ. 2/-

வெளிநாடு

கப்பல் வழி ரூ. 120/- விமான வழி ரூ. 246/-


விபரங்கட்கு எழுதுக:

**யுனெஸ்கோ கூரியர்**
**தென்மொழிகள் புத்தக நிறுவனம்**
**18, கிழக்கு ஸ்பர்டாங்க் சாலை**
**சென்னை-600 031.**

படிப்பகம்

www.padippakam.com

REGD. NO. M. 8276



படிப்பகம்